விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 012 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 15 ஞாயிற்றுக்கிழமை (31.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## 33 வயதுடைய இளம் தாய் கொடிகாமத்தில் உயிரிழப்பு

### இரண்டாவது குழந்தை பிறந்து சில நாட்களிலேயே சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் 33 வயதான இளம் தாயொருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண்ணுக்கு சில நாட்களுக்கு முன்னே இரண்டாவது குழந்தை பிறந்துள்ளது.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த கணேசமூர்த்தி தனுஷா (வயது-33)

19

## இணைய வழி மோசடி அதிகரிப்பு

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இணையவழி பண மோசடிகள் அதிகரித்துள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த வருடம் இணையத்தில் நடத்தப்பட்ட பண மோசடிகள் தொடர்பாக 150க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை கணினி குற்றப்பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தர்ஷிகா குமாரி தெரிவித்துள்ளார்.

தமது அடையாளத்தை வெளிப்படுத்தாத பல்வேறு நபர்களினாலேயே இந்த இணையவழி மோசடிகள் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இணையவழி மோசடி மூலம் பணம் மற்றும் உடைமைகளை இழந்த பல சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர்

19

# இலங்கை முழுவதும் டெங்கு தாக்கம் உச்சம்

### 11 ஆயிரம் தொற்றாளர்கள் டிசம்பர் மாதம் மட்டும் பதிவு

(கொழும்பு)

நாடு முழுவதும் டெங்குத் தாக்கம் காணப்படுவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

டிசம்பர் மாதம் மட்டும் 11 ஆயிரத்துக்கு அதிகமான டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)



### 24 மணி நேரத்தில்

## நாட்டில் மேலும் 1,554 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் யுக்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 24

19

## ஒரு இலட்சத்துக்கு அதிக வருமானம் பெறுவோரே வரி செலுத்த வேண்டும்

### ஏனையவர்கள் தேவையில்லை - நிதி அமைச்சு

(கொழும்பு)

மாதாந்தம் ஒரு இலட்சத்துக்கு அதிக வருமானம் பெறுவோரே வரி செலுத்த வேண்டும். ஏனையவர்கள் வரி செலுத்தத் தேவையில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்



19

## புங்குடுதீவில் மாணவி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு இறுப்பிட்டியில் மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த வேலணை மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் வசந்தராஜா

19

## சி.ஐ.டி எனத் தெரிவித்து கிளி., வவுவில் கைவரிசை

### 3 இளைஞர்கள் கைது

(வவுனியா)

சி.ஐ.டி. எனக் கூறி வவுனியா மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் திருட்டில் ஈடுபட்ட மூவர் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள பஸ் தரிப்பிடப் பகுதியில் நேற்றைய தினம் மூன்று இளைஞர்கள் அந்த வீதியால் மோட்டார் சைக்கிளில்

19

### டிசம்பரில்

## 2 இலட்சம் சுற்றுலாவிகள் நாட்டுக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்தின் டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின்

19

### ஒட்சிசனுக்கு பதிலாக காபனீரொட்சைட்

## வைத்தியசாலைத் தவறால் பெண்ணொருவர் மரணம்

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தவறுதலாக அதிகளவு காபனீரொட்சைட் வழங்கப்பட்டமையால் நோயாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - நுகேகொட பகுதியில் வசிக்கும் 61 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு, மார்பக அறுவை

19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் அக்கடமி
## ROYAL ACADEMY

நாவலர் றோட், நல்லூர். | அரசடி றோட், யாழ். நகர்.

**புதிய கல்வியாண்டு - 2024**

தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium

ஆரம்பம் 01.01.2024 திங்கட்கிழமை

கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T, சிங்களம்

ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் கற்பதற்கான அரியவாய்ப்பு!

(18425)

யாழ். றோயல் காலை 7 மணி

நல்லூர் றோயல் காலை 9.30 மணி

குறிப்பு : • மாதாந்தப் பரீட்சைகள் இடம்பெறும். ( புள்ளிகள் பெற்றோருக்கு வழங்கப்படும். )
• ஒவ்வொரு தவணை முடிவிலும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும்.

- இயக்குநர் -

# Easy Real Estate
## காணி, வீடு விற்பனைக்கு

- கோண்டாவில் கிழக்கில் அமைதியான சூழலில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு மாடி வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
- சாவகச்சேரி நகருக்கு அண்மையில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

வாங்குபவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும் தரகர் தேவையில்லை.

காணிகள், வீடுகள், வியாபார நிலையங்கள் விற்பதற்கும் வாங்குவதற்கும் நாடவேண்டிய நம்பிக்கையான இடம்

(18435)

Hotline : 076 742 4301
Phone : 075 742 1612
Whatsapp : 075 710 9639
Viber : 071 964 6619

# மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8055)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

# வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் திருமண மண்டபம் ஒன்றிற்கு கணினி அறிவுள்ள கிளிநொச்சியை வதிவிடமாக கொண்ட வரவேற்பாளர்(பெண்), Development and Marketing முகாமையாளர் (ஆண்) தேவை.

(18424)

தொடர்புகளிற்கு :

**076 197 8406**



# உரிமையாளர் இடமாற்றம்

கோண்டாவில் ஸ்ரேசனடி
இரண்டாம் (2) இலக்க கடையில்
இயங்கிய உரிமையாளர்
**நல்லையா உதயகுமார்**
(பெரியதம்பி)
ஆட்டிறைச்சிக் கடை கொக்குவில்
குளப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்
கடைக்கு மாற்றப்பட்டுள்ளது.
என்பதை வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருக்கின்றோம்.

**ஆரம்பம் : 01.01.2024**

(18417)

தொ.இல. : **077 085 6479**

# பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 35 - 55 வயதிற்குட்பட்ட 02 பெண் வேலையாட்கள் தேவை.

(18444)

**077 937 0000**
**075 498 5400**
**021 221 7600**

# பெண் வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றிற்கு 18 - 30 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை.
08.00 am - 06.00 pm
30,000/= + மதிய உணவு

(18444)

**077 937 0000**
**075 498 5400**

# PickMe Taxi Service

நீங்கள் வைத்திருக்கும் அனைத்து வகை வாகனங்களையும் PickMe சேவையில் இலவசமாக இணைக்க உடனடியாக

**077 473 7737**

எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்.

(18452)

# கணித வகுப்புக்கள்

**6 - 11 வரையான**
மாணவர்களுக்கு
**கணித வகுப்புக்கள்**
நடைபெறுகின்றன.
திருநெல்வேலி சிவன் கோவில் அருகாமையில்

(18436)

**077 594 5456**

27 ஆவது

# பிறந்தநாள் நினைவலைகள்



## வெற்றிவேலு பிரசாந்தி

யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
க.பொ.த. உயர்தரம் (கணிதப்பிரிவு) 2015

தாயின் மடியில் : 31.12.1996
நோயின் பிடியில் : 31.08.2016

குலமகளாய் எங்கள்
குலம் தளைக்க வந்தவளே
அழகோவியமாய் - எங்களை
அமர்க்களப்படுத்தினாயே
கடைக்குட்டியாய் - எங்கள்
கவலைகளை நீ தகர்த்தாய்
காலம் வளருதென கவலையின்றி -நாமிருக்க

கண்ணிமைக்கும் நேரத்தில் - நீ
காணமால் போய் விட்டாய்
உற்றவளே உண்மைநேயம் கொண்டவளே
உனக்கு இன்று அகவை நாள் அல்லவோ...
பிரசாந்திக் குட்டியே!
பிரியமுடன் உனை அழைக்கின்றோம்
எம் இல்லமதில் அகமகிழ
எப்போது நீ ஓடிவருவாய் என
ஏங்கித் தவிக்கின்றோம்......!

(18451)

விண்ணுலகில் வாழும் எங்கள் கடைக்குட்டிச் செல்லத்திற்கு
கண்ணீரில் நனைந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்...

" பிரசாந்தி வாசா "
எல்லை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

077 986 2521

[illegible] குடும்பத்தினர்

# தமிழ் ஆசிரியர் தேவை

வடமராட்சி நெல்லியடிப் பிரதேசத்தில் வசிக்கும் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு பிரத்தியேகமாக தமிழ் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(அ)

**076 097 3124**

# வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் இந்திய உயர்தர சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- தோசை தயாரிப்பவர்
- சிற்றுண்டி தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- கணனி மூலம் சிட்டை தயாரிப்பாளர் (ஆண்/பெண்)

(18423)

**070 664 7466, 076 166 1986**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18426)

**077 468 3354, 071 173 3911**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறக்கும் புதுவருடத்திலாவது எமக்கு நீதி கிடைக்குமா?

## காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(குருமன்காடு)

**பிறக்கப்போகும் புதுவருடத்திலாவது எமக்கான நீதியை வழங்க சர்வதேசம் முன்வர வேண்டும் எனக்கோரி வட-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**




வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கருத்து தெரிவிக்கையில்,

சர்வதேச நீதிக்காக போராடி வரும் நாம் பல வருடங்கள் கடந்தும் நீதி மறுக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக ஏமாற்றத்திற்குள்ளாகி வருகின்றோம்.

அத்துடன் இலங்கை அரசின் ஆணைக்குழுக்கள் மீதும் அதன் விசாரணைகள் மீதும் நாம் முற்றாக நம்பிக்கை இழந்துள்ளோம்.

எனவே பிறக்கின்ற புதிய வருடத்திலாவது எமக்கான நீதியை வழங்குவதற்கு சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் எனத் தெரிவித்தனர்.

ராஜபக்ஷ குடும்பம் பேரக் குழந்தைகளை கொஞ்சி மகிழும் போது நாம் பேரக் குழந்தைகளை தேடி வீதியில் நிற்கிறோம், குடும்பங்களாக சரணடைந்த போது அவர்களுடன் சரணடைந்த 29 குழந்தைகள் எங்கே" என எழுதப்பட்ட அரசிற்கு எதிரான பதாதைகளை ஏந்திவாறு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது கிளிநொச்சி அலுவலகத்தின் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-100-250-315)


## வேலையாட்கள் தேவை

அலுவலக வேலைக்கு ஆண்/பெண் இருபாலரும் தேவை.

விக்கி லேனர்ஸ்
077 830 8360
076 776 8444 (18442)


## 'ஐஸ்' போதையுடன் இளைஞன் கைது

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பில் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கைவேலி பகுதியிலுள்ள இராணுவ சிற்றுண்டிச்சாலைக்கு அருகாமையில் விசேட சோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸார் 8 பைக்கற்றுக்களில் 15 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் அந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஐஸ் போதைப் பொருள் 80,000 ரூபா பெறுமதியுடையது எனவும் மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞனை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-5-6-299)

## மன்னாரில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் 2023 ஆம்ஆண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு திட்டங்கள் சில சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மன்னாரில் காற்றாலை மின் உற்பத்திகோபுரம் அமைத்து வருகின்றமை மற்றும் சட்ட விரோதமாக காணிகள் அபகரிப்பு, சட்ட விரோத மரம் வெட்டபடுகின்றமை குறித்தும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

குறித்த கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், கே.திலீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5-6)

## முகநூலில் காதலாகி நேரில் வரவழைத்து கொள்ளை

### நெல்லியடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

முகநூலில் பெண்போல பேசி ஏமாற்றி நபரொருவரிடம் கொள்ளையில் ஈடுபட்ட இருவர் நேற்று நெல்லியடி பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் யாழ்ப்பாணம் - நெல்லியடியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருக்கு நெல்லியடியைச் சேர்ந்த ஒருவர் முகநூலில் பெண் போல பழகி காதல் வலையில் வீழ்த்தி நெல்லியடிக்கு வர வழைத்துள்ளார்.

இதனை நம்பி நெல்லியடிக்கு வந்த திருகோணமலை வாசியை கத்தி முனையில் அச்சுறுத்தி பணம் உடைமைகள் என்பன இருவரால் கொள்ளையடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக திருகோணமலை வாசி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தார்.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் இருவரை கைது செய்ததுடன் கொள்ளையடித்துச் செல்லப்பட்ட பணம் உடமைகளையும் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர். (நி-5-6)


## எனது 33 ஆம் ஆண்டு ஆன்மீகப் போராட்டப் பாதையிலே.....



**என் அன்பு உள்ளங்களே!**

இப்புதிய ஆண்டில் பழையன நீங்கிட புதியன மலர்ந்திட புதுமைகள் பூத்திட நாடுவளம் பெற மக்கள் நலம் பெற இறையருள் வேண்டி சர்வ வல்லமை பொருந்திய சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகனின் திருப்பாதங்களை வணங்கி இப்புத்தாண்டை வருக வருக என வரவேற்று வாழ்த்துகின்றேன்.

இத்துடன் ஈசுரவிநாயகரின் சூத்திரத்திலே உள்ள திருவாக்குகளைச் சற்று சிந்திப்போம் உங்கள் பிரச்சினையைத் தீர்க்க எவருமே இல்லை ஆளில்லாத காரணத்தால் நானே வருகின்றேன் என்ற கூற்று. இதை இப்போது யாவரும் ஏற்றுக்கொண்டு விட்டீர்கள் அல்லவா.

அடுத்த கூற்று உங்கள் பிரச்சினை பேசித் தீர்க்கும் பிரச்சினையன்று. நாட்டின் இறைமைக்கு ஆபத்து ஏற்பட்ட பின்னரே பேசித் தீர்க்கும் தன்மையது நாட்டின் இறைமைக்கு இரண்டு காரணங்களால் ஆபத்து ஏற்படும் என்று வலம்புரிப் பத்திரிகையில் (16.11.2023) குறிப்பிட்டிருந்தேன். அந்தச் சம்பவம் நிகழும் வரை எதுவும் சாத்தியப்படப் போவதில்லை. சிங்கள அரசியல் தலைவர்கள் பேச்சு வார்த்தைக்கு அடிக்கடி அழைப்பார்கள். தற்போது கூட அழைக்கின்றார்களே! இது ஒரு சிங்கள அரசியல் தந்திர வாய்ப்பாடு முடிவு யாவும் ஏமாற்றமே. வடக்கு,கிழக்கு தமிழர்களிடம் கொழும்பு சிங்கள அரசியல்வாதிகள் தேடி வரும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

- மனித சக்திக்கு அப்பாற்பட்டது தெய்வீகசக்தி
- மனித சக்தியை ஆட்டிப்படைப்பது. தெய்வீகசக்தி
- மனித சக்தியால் முடியாதவற்றிற்குத்தான் தெய்வீகசக்தி.

**என் அன்பான உள்ளங்களே!**

மனிதனால் முடியும் வரை இறைவன் பார்த்துக் கொண்டு தான் இருப்பார். நாங்கள் எவ்வளவு துன்பப்பட்டாலும் பார்த்துக் கொண்டே தான் இருப்பார். மனிதனால் முடியும் என்றால் இறைவன் எதற்கு? எப்போது கடவுளை தஞ்சம் என்று அடைகின்றோமோ.. அப்போதே தொழிற்பட தொடங்கிவிடும். அதாவது இனி எங்களால் முடியாது தெய்வமே நீதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று இறைவனைத் தஞ்சமடைய வேண்டும். எடுத்த காரியம் யாவும் வெற்றியாகும் இது நிச்சயம்.

எமது நாட்டுப்பிரச்சினைக்கும் மனித சக்தியால் முடியாது என்று அடியேன் ஈசுரவிநாயகரைத் தஞ்சமென்றடைந்தேன். அவரும் தொழிற்பட்டு தர்சன மூலம் காட்டிக் காட்டி மக்களுக்கு தெரியப்படுத்தினார். இப்போது அரசியல்வாதிகளுக்கும் கூறும்படி கூறுகின்றார்.

எனவே தமிழ் அரசியல்வாதிகளே! இன்னும் காலத்தை வீணடிக்காது விழிப்பாக இருங்கள்! நம் நாட்டுப்பிரச்சினை பேசித்தீர்க்கும் பிரச்சினையன்று என்று அன்றே ஈசுரவிநாயகர் கூறிவிட்டார். அதற்குப்பின் நீங்கள் எத்தனையோ பேச்சுக்கள் பேசிவிட்டீர்கள். உங்களால் முடிந்ததா? இல்லை காரணம் பேசித்தீராது.

இன்றும் சிங்கள அரசியல்வாதிகள் பேச வாருங்கோ, வாருங்கோ என்று கூப்பிட்டாலும் நீங்கள் தமிழ் மக்கள் படும் துன்பத்தை மனதில் கொண்டு காலத்தை நீடிக்காது விழிப்பாக இருங்கள் அடுத்த கட்டம் நாடு பறிபோகப் போகின்றது. அதற்குப்பின்னர் தான் உங்கள் பேச்சுவார்த்தை வெற்றியாக முடியும் அதுவரை ஈசுரவிநாயகரோ விடப்போவதில்லை.

**நடப்பவை யாவும் நன்மைக்கே**

(18445) 31.12.2023

சோழியூரான் பிறைசூடிக்குரு
ஆன்மீகவாதியும் பூசகரும் பரம்பரை பரிபாலகரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கை அணியின் புதிய கப்டன்களான வனிந்து-குசல்

இலங்கை அணியின் இருபது-20 கப்டனாக வனிந்து ஹசரங்காவும் ஒருநாள் கப்டனாக குசல் மெண்டீஸ் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இருவரும் ஜிம்பாப்வே தொடரில் இருந்து கப்டன்களாக செயற் பட உள்ளனர்.


காயம் காரணமாக உலகக்கோப்பை தொடரை தவற விட்ட ஹசரங்கா தற்போது காயத்தில் இருந்து மீண்டு வருகிறார். இதனால் அடுத்த வரும் தொடர் களில் அவரை காணலாம்.





அடுத்த மாதம் ஜிம்பாப்வே அணி 3 ஒருநாள், 3 இருபது 20 போட்டிகள் கொண்ட தொட ரில் விளையாடுவதற் காக இலங் கைக்கு வர உள்ளது. இந்த தொடர் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி தொடங்கவுள் ளமை குறிப்பி டத்தக்கது. (நி-5-6)

# இந்திய அணிக்கு அபராதம் விதிப்பு



இந்திய கிரிக்கெட் அணி தென் ஆபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான இருபது -20 தொடர் 1-1 என டிராவில் முடிந்தது. ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் கடந்த 26 ஆம் திகதி தொடங்கிய முதல் டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 32 ரன் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி தென் ஆபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது.

இந் நிலையில், தென் ஆபிரிக்கா அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பந்து வீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக இந்திய அணிக்கு போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தர வரி சைக்கான புள்ளிப்பட்டியலில் இரண்டு புள்ளிகளும் குறைக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3005

**லத்தீஸ்**

ஏதோ புது வருஷம் பொறக்க போகுதாமே....



எந்த ஆஸ்பத்திரியில பிறக்கப் போகுதுன்னு கேட்டா அடிக்க வராங்க

**சங்கர்**

இவனுங்க சுருட்டி கொடுக்குர கலண்டரா நோக்கி சுவத்துல மாட்டுறதுக்குள்ள அடுத்த நியூஇயர் வந்துரும் போல...



**விது**

லட்ச லட்சமா செலவு பண்ணி கல்யாணம் பண்றாங்க...



எக்ஸ்ரா இரண்டு நிஜாம்பாக்கு கேட்டா முறைக்குறாங்க..

**ஆசா**



வண்டியில் போகும் போது எதுக்காக ஹெல்மெட் போடுறாங்க?




போன் பேசிட்டு போக போடுறாங்க சார்.

**சபரிசா**

நானும் அருவிக்குபோயி ஒரு குளியல் போடனும்னு ரொம்ப ஆசப்பட்டேன்...



அதன் விளைவோ என்னவோ மூக்குல இருந்து நிக்காம வந்துட்டு இருக்க அருவிமாதிரி... சளி

**அபி**

ரொம்ப யோசிக்காதடா .. முடி கொட்டும் ..




நான் யோசிக்கிறதே முடி கொட்டுறத பத்தி தான்டா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2 அரசடிவீதி 37 எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சுந்தரம் பெண் நாகம்மாவின் உரிமையாளர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை தம்பித்துரை பெண் தில்லைநாயகிதேவி, சவுந்தரநாயகம் தம்பிராசாவும் பெண் சரஸ்வதியும், தம்பிநடராசா ஆலாலசுந்தரம் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசரத்தினம் முகதாவில் 1967.11.27 ஆம் திகதி 71 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 5 குளி 6 பங்கினை இராமச்சந்திரன் பெண் இந்திராதேவி என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

மேலும் கமலாதேவி செல்லையா என்பவர் பிரசித்த நொத்தாரிசு சா.கந்தப்பன் முகதாவில் 1971.06.26 இல் 11588 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 3 7/8 இல் சொரியலாக 1/2 பங்கினை தம்பி நடராசா சீதாதேவிக்கு வழங்கியுள்ளார்.

சின்னையா இராமச்சந்திரனும் பெண் இந்திராதேவியும் பிரசித்த நொத்தாரி ப.இராசரத்தினம் முகதாவில் 1978.10.01 இல் 332 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 3/6 பங்கினை (காணியில் மட்டும் சொரியலாக இது நிலப்பரப்பு 2 குளி 12) அளவு கொண்ட ஆதனத்தை தம்பி நடராசாவின் பிள்ளைகளான சீதாதேவி, சாந்தலட்சுமி ஆகியோருக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

தம்பி நடராசா மகள் சாந்தலட்சுமி என்பவர் பிரசித்த நொத்தாரிசு த.சோமசுந்தரம் முகதாவில் 1979.08.05 இல் 269 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 இல் சொரியலாக 1/2 பங்கினை தம்பி நடராசா மகள் சீதா தேவி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

சுந்தரம்பிள்ளை தம்பி நடராசாவும் தம்பித்துரை கைம்பெண் தில்லைநாயகி, தம்பி நடராசா ஆலாலசுந்தரம், யேம்ஸ் சவுந்தரநாயகம், தம்பிராசா கைம்பெண் சரஸ்வதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு தி.ஜெகதீசன் முகதாவில் 1988.10.15 இல் 2427 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 இல் சொரியலாக 19/20 பங்கினை தம்பி நடராசா மகள் சாந்தலட்சுமி என்பவருக்கு நன்கொடையளித்துள்ளனர்.

இராமச்சந்திரன் கைம்பெண் இந்திராணி என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் முகதாவில் 2004.03.25 இல் 2934 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 இல் சொரியலாக 1/40 பங்கினை உருத்திரதீசன் மனைவி கௌரி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளனர். இவ்வுறுதியில் இவ்வாதனம் தனது சகோதரியாகிய சீதாதேவி சந்ததியற்று இறக்க தனக்கு வந்தடைந்த சகோதரவழிப் பங்கு எனக் குறிப்பிட்டுள்ளார்.

சின்னையா கைம்பெண் கமலாதேவி என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி. வீரகத்திப்பிள்ளை முகதாவில் 2004.12.18 இல் 5582 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 இல் 1/40 சொரியலான பங்கினை இராசகோபால் பெண் சாந்தலட்சுமி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார். இவ்வாதனம் அடியற்று காலஞ்சென்ற சீதாதேவி என்பவரின் முதுசப்பங்கு என குறிப்பிடப்பட்டுள்ளது.

இராசகோபால் பெண் சாந்தலட்சுமி (தம்பிநடராசா மகள் சாந்தலட்சுமி) என்பவர் பிரசித்த நொத்தரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 2015.08.04 இல் 9835 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படுத்தல் உறுதிமூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 10.76 அளவு கொண்ட ஆதனம் தனக்கு தாய் வழி வந்த முதுசமாக காட்டியுள்ளார். தம்பிநடராசா மகள் சாந்தலட்சுமி என்பவர் 31.12.2018 இல் 589 ஆம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு வி.மணிவண்ணன் முகதாவில் நிறைவேறிய திருத்தலும் உறுதிப்படுத்தலும் உறுதி மூலம் ஆதனத்தின் விஸ்தீரண அளவு திருத்தப்பட்டமை தொடர்பாக குறிப்பிட்டுள்ளார்.

தம்பி நடராசா மகள் சாந்தலட்சுமி என்பவர் பிரசித்த நொத்தாரிசு ஜ.அபர்னா முகதாவில் 18.07.2022 இல் 1457 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 14.90 அளவு கொண்ட ஆதனத்தை சிவபூமி அறக்கட்டளைக்கு நன்கொடையளித்துள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி. வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கு இறை நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, யாழ்.மாநகரசபை "மாதவன் வளவும் குசவன் புலமும் குசவன் வளவும்" நிலப்பரப்பு 2 குளி 12 உம் அதற்குச் சேர்ந்தவைகளும் இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.கனகசபை அவர்களால் 2011.04.29 ஆம் திகதி அளந்து வரைந்த 4471/11 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1,2 என பிரித்துக் காட்டப்பட்டதன்படி நில பரப்பு 2 குளி 11.96 இதில் துண்டு 1 என காட்டப்பட்ட நிலபரப்பு 2 குளி 10.76 இந்த நிலப்பரப்பு 2 குளி 10.76 இல் நிலப்பரப்பு 1 குளி 14.90 உம் அதனைச் சேர்ந்தவைகளும் இது 2021.11.30 ஆம் திகதி ந.கேதீஸ்வரன் முகதாவில் இல 5221 இல் வரையப்பட்ட நிலஅளவைப் படத்தில் துண்டு 1 என காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலப்பரப்பு 1 குளி 14.90 இற்கும் படத்தின் படி எல்லைகள்

கிழக்கு - துண்டு 2 என்ற மீதி ஆதனமும் நிரஞ்சன் பெண் சிவப்பிரியாவின் ஆதனமும் உருத்திரதீசன் பெண் கௌரியினதும் ஆதனங்கள்
வடக்கு - செல்லையா சிவசோதி பூபாலசிங்கத்தின் ஆதனம்
தெற்கு - அரசடி வீதி
மேற்கு - சின்னையா சிவசுப்பிரமணியத்தின் உரிமைக்காரரின் ஆதனம்

இதனடங்கலும் இதற்குச்சேர்ந்தவைகளும்

தற்போது இவ்வாதனத்தை சிவபூமி அறக்கட்டளை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவபூமி அறக்கட்டளை என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்.மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C-8051)

# இராசிபலன்

**31.12.2023**
**மார்கழி 15, ஞாயிற்றுக்கிழமை**
**சதுர்த்தி முற்பகல் 11.46 மணிவரை**

**மகம் முழுவதும்**
**சுபநேரம் -9.29-10.59 மணிவரை**
**இராகுகாலம்-4.59-6.29 மணிவரை**

**சந்திராஷ்டமம்**
**உத்தராடம்**

**வளவன்**



புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும், புதிய முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.



உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.



உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.



நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், குடும்பச்சுமை கூடும், அனுபவத்தின் வாயிலாக பாதகங்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



சுபவிரயங்கள் கூடும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.



எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன் வரலாம், பணப் புளக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.



எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும்.



குடும்பத்தினரிடைய ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகள் தாமதமாகாலாம்.



மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் விலகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

எல்லோருக்கும் நீ நம்பிக்கையுடையவனாக இரு. ஆனால் நீ யாரையும் நம்பிவிடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மக்கள் தொகை 75 மில்லியனாக அதிகரிப்பு

## அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு திணைக்களம்

(வோஷிங்டன்)

அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்புத் திணைக்களத் தின் படி, 2023 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 75 மில்லியன் ஆக அதிகரித் துள்ளது.

அத்தோடு, 2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குள் உலகம் முழுவதும் 8 பில்லியன் மக்கள் வாழ்வார்கள் என அந்த திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஆனாலும், இந்த ஆண்டு உலக மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 1 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகின்றதாகவும் கூறப்படுகிறது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஒவ்வொரு நொடிக்கும் 4.3 பிறப்புகள் பதிவாகும் போது, 2 இறப்புகள் ஏற்படக்கூடும் என்று அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# பயணச்சீட்டின்றி பயணித்தால் 10 ஆயிரம் ரூபாய் வரை அபராதம்

## தொடரூந்து திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தொடரூந்தில் பயணிக்கும் பயணிகளில் 25 சதவீதமானோர் பயணச்சீட்டு இன்றி சட்டவிரோதமாக பயணிப்பதாக தொடரூந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அதன் பொது முகாமையாளர் எச்.எம்.பண்டார இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக தொடரூந்து திணைக்களத்துக்கு 3 பில்லியன் ரூபாய் வருமானம் இல்லாமல் போயுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பயணச் சீட்டு இன்றி பயணிப்பவர்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக பயணச்சீட்டு இன்றி பயணிப்பவர்களுக்கு அறவிடப்படும் அபராதத் தொகையை 10,000 ரூபாய் வரையில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தொடரூந்து திணைக்களத்தின் பொது முகாமையாளர் எச்.எம்.பண்டார தெரி வித்துள்ளார். (நி-5-6)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பொருட்கள் பறிமுதல்



(சென்னை)

இராமநாதபுரம் அருகே புதுமடம் கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்தல் பொருட்கள் கடத்தப்பட உள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து மரைன் பொலிஸார் புதுமடம் கடற்கரைப் பகுதிக்கு விரைந்து சென்று, ரோந்து பணியில் ஈடுபட்ட னர்.

சந்தேகத்திற்கு இடமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டாட்டா ஏசி வாகனத்தை சோதனையிட்ட போது அதில் சோப்பு, எண்ணெய், வாசனை திரவியம் உள்ளிட்ட இந்திய பெறுமதியில் 16 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை கடல் வழியாக இலங்கைக்கு கடத்த வாகனத்தை நிறுத்தி வைக்கப்படுகிறது தெரியவந்தது.

இதையடுத்து பொருட்களை பொலிஸார் பறிமுதல் செய்து தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (நி-5-6)


# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் கல்வி கற்பித்து
அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்ற
ஆசிரியை திருமதி.கேதீஸ்வரி
சிவனொளிபவன் அவர்களின்
அன்புத் தாயார்

**நமசிவாயம் கமலாதேவி**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

(சி-8053)

சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.


### இலங்கை வருகிறார் தாய்லாந்து பிரதமர்

(கொழும்பு)

தாய்லாந்து பிரதமர் ஷ்ரேத்தாதவிஸின் எதிர்வரும் பெப்ரவரி மாதம் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவிருப்பதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவுள்ளார். (நி-5)

# தபால் கட்டணத்திலும் திருத்தம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு முதல் தபால் கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்வது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல மூலப்பொருட்களின் விலையேற்றம் காரணமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளதாக தபால் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 28 – 05 – 1939



விண்ணில் 01 – 12 – 2023

அமரர். **ஆனந்த நடராஜா சுரேந்திரா**
**[வின்சன் டி போல்]**
மின் தொழில்நுட்பவியலாளர் (நெல்லியடி)

தந்தாய்! உயிர் தந்து தந்தையெனும் உறவு தந்தாய்
ஒழுக்கமொடு வாழ நல்ல கல்வி தந்தாய்
உழைப்பால் உனை வருத்தி வாழ்வு தந்தாய்
உடன் உறைந்து அன்புடன் நல்லுறுதி தந்தாய்
உலகில் நீ இல்லை என்ற நிஜம் எம்மை
நிலைகுலைய செய்தாலும் விழிநீரால் விடை தந்தோம்
விண்ணுறைந்து வேதனுடன் நீடு வாழ்வாய்

இல.859/18 ஆஸ்பத்திரி வீதி,
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
(8439)
குடும்பத்தினர்.



# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



கடந்த 02.12.2023 அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்
அமரர். **முருகேசு சுப்பிரமணியம்** (கராஜ் வைரமுத்து)
(உரிமையாளர் அம்பிகை மோட்டார் வேக்ஸ்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 01.01.2024 திங்கட்கிழமை, அதிகாலை 03.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் 03.01.2024 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-8050)

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

“[illegible]வாசா”
வதிரி.கரவெட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 421
Viber 076 636 3378



65

# தனிவழிசென்ற தமிழரசு...!

**தமிழினத்தின் ஏகோபித்த ஆதரவவைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பை உடைத்து, சுயாதீனமாகச் செயற்படப்போவதாகக் கூறி வெளியேறிய தமிழரசுக் கட்சிக்குள் தற்போது பெரும் பூகம்பம்வெடித்திருக்கிறது.**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ் மக்களின் ஏகோபித்த ஒற்றுமையின் வெளிப்பாடு என்றால் அதற்கு மாற்றுக் கருத்துக்கு இடமேதும் இருக்காது.

அந்தளவிற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை தமிழ்மக்கள் அங்கீகரித்தார்கள் என்பதற்கு அதன் ஈடில்லா வெற்றிகள் பறைசாற்றி நிற்கிறன.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் அடுத்தகட்டமாக அரசியல் நீரோட்டத்தில் தமிழர்களுக்கான அரசியல் தளத்தை மிகப் பலம் பொருந்தியதான நிலைக்கு எடுத்துச் சென்றது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றால் அதை எவராலும் மறுத்து விட முடியாது.



அந்தளவிற்கு தமிழ்தேசியப் பற்றுடன் இருக்கும் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என உலகிற்குப் பிரகடனப் படுத்தினர்.

இதன் விளைவு உலக அரங்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுக்கான ஏக பிரதிநிதிகள் என்ற அந்தஸ்ததைப் பெற்றுக் கொண்டது.

சர்வதேச தலைவர்கள் எவர் இலங்கைக்கு வருகை தந்தாலும் தமிழ்ர்களின் உரிமை விடயங்கள் பேசும் ஏகோபித்த உரிமை தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமே இருந்தது. அதை சர்வதேசமும் அங்கீகரித்திருந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ் தேசிய கொள்கை கொண்ட பல கட்சிகளின் கூட்டாக விளங்கியிருந்தது.

2009 இறுதியுத்தத்தின் பின் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரச்சினைகள் எழத் தொடங்கியது.

அதுவரை கூட்டாக இருந்த பலம் பொருந்திய கட்சிக்குள் பிழவுகள் எழத் தொடங்கியது.

இதற்கு பதவி ஆசை மிகப் பெரும் செல்வாக்கைச் செலுத்தியது.

கூட்டுக்கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பம் ஒரு கட்டத்தில் மிகப் பெரும் மோதலாக வெடித்தது.

தமிழரசுக் கட்சி தனது கட்சியைப் பலப்படுத்துகிறதே தவிர ஏனைய கட்சிகளுடன் ஒத்துப் போகவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எழத் தொடங்கின.

ஏனைய கட்சிகள் ஒன்றாகவும் தமிழரசுக் கட்சி தனித்தும் நின்று வார்த்தைப் போரில் ஈடுப்பட்டது.

கட்சிக்குள்ளான உச்சக்கட்ட மோதல் தமிழரசுக்கட்சி இனிவரும் அனைத்துத் தேர்தல்களையும் தனித்து எதிர்கொள்ளும் தீர்மானத்தை எடுத்தது.

இங்குதான் தமிழ் மக்களின் மனங்கள் நொருங்கிப் போயின.

தமிழ் தேசியத்தை மூச்சாய் கொண்ட இனத்தின் இருப்பைக் காட்டவல்ல தமிழ் தேசியக் கூட்டமைப்பு எனும் சக்தி உடைந்து போவதை தமிழ் மக்கள் ஒருபோதும் விரும்பவில்லை.

அதை தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

அதன்பின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கத் தொடங்கியிருந்தாலும் அது பலம் குன்றிய அணியாகவே பார்க்கப்பட்டது.

பலம் மிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனிவழியில் பயணிக்கத் தொடங்கிய தமிழரசுக் கட்சிக்குள் தற்போது பெரும் குழப்பம் எழுந்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

தற்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா தழிழரசுக் கட்சியின் தலைமைப்பதவியை வகித்து வரும் சந்தர்ப்பத்தில் புதிய தலைமையைத் தேர்ந்தெடுக்கும் காலம் நெருங்கியிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியைத் தெரிவு செய்யும் கூட்டத்தில் பாராளு மன்ற உறுப்பினாகளான சி.சிறிதரன் மற்றும் ஆ.சுமந்திரன் ஆகியோருக்குள் கடும் போட்டி நிலவியதைத் தொடர்ந்து பொது வாக்கொடுப்பினூடாக தலைமைப் பதவியைத் தெரிவு செய்யலாம் என கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளது.

இது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பேசுபடுபொருளாக மாறியிருக்கிறது.

இரா.சம்பந்தன் அவர்கள் வயது முதிர்வு காரணமாக தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்ற செய்திகள் எழுந்திருந்தும் அதற்கு இரா.சம்பந்தன் அவர்கள் சூடான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்ததும் தமிழரசுக்குள் பூகம்பம் எழுந்ததை தெளி வாக எடுத்தியம்பியிருந்தது.

நிலை இதுவாக இருக்கையில், தமிழரசுக் கட்சியின் அண்மைக்கால நடவடிக்கைகள் தன்னை ஓரங்கட்டுவதாகவும் தனக்குத் தெரியாமல் திருகோணமலை மாவட்ட கட்சி மாநாட்டை நடத்தும் முடிவு எடுக்கப்பட் டிருப்ப தாகவும் தெரிவித்து அவசர கடிதம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு அனுப்பியிருக்கிறார் இரா.சம்பந்தன்.

இங்குதான் நாம் ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். அதாவது ஈழத் தமிழர்களது ஏகோபித்த தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் கூட்டை உடைத்துக் கொண்டு அதிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படத்தீர்மானித்திருந்த தமிழரசுக் கட்சி இப்போது மல்லுக்கட்டி நிற்கிறது எனின், கர்ம வினை இது தானோ என்று தமிழ் மக்கள் பேசத் தலைப்படுள்ளனர்.

இப்போதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை தமிழ் மக்கள் தேசிய ஒற்றுமையையே விரும்புகிறார்கள். விட்ட தவறை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவோமாக இருந்தால் அதை நிச்சயம் தமிழ் மக்கள் இருகரம் கூப்பி வரவேற்பர்.

இல்லை எமக்கு பதவியே முக்கியம் என்று மீண்டும் கட்சிக்குள் மல்லுக் கட்டுவோமாக இருந்தால் அது தமிழனத்தின் எதிர்காலத்தையே பாதிக்கும். இதை அனைத்து கட்சித் தலைமைகளும் உணர்ந்து மீண்டும் தமிழினத்தின் ஏக பிரதிநிதிகள் என்ற கூட்டின்கீழ் ஒன்றிணைந்தால் தமிழினம் மீட்சிபெறும். ஒன்றிணைவார்களா?

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தமிழகத்தின் மிகச் சிறந்த நடிகரும் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவரும் ஈழத்தமிழ் மக்கள் மீது இடையறாத பற்றுக் கொண்டவருமாகிய கப்டன் விஜயகாந் காலமானார் என்ற செய்தி ஈழத்தமிழ் மக்களை மிகுந்த வேதனைக்கு ஆளாக்கியுள்ளது. அவரின் இழப்பு ஈழத் தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

தமிழகத்தின் முதலமைச்சராக வரக்கூடிய மக்கள் ஆதரவு விஜயகாந்துக்கு இருந்த போதிலும் காலப் பிழைபோல அவரால் முதலமைச்சர் பதவிக்கு வரமுடியவில்லை. அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியை குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** என்ன செய்வம் யாழ்ப்பாணத்தை ஓர் உலுப்பு உலுப்புறதெண்டு டெங்கு முடிவு செய்து போட்டுது போல.

**மூப்பர்:-** யாழ்ப்பாணம் மட்டுமல்ல வடமாகாணம் முழுவதிலும் இப்ப டெங்கு தலைவிரித்தாடுது.

**கங்காணி:-**எங்கும் நுளம்பு பெருகக்கூடிய ஏதுக்கள் இருக்குதெண்டால், என்ன தான் செய்ய முடியும்.

**சிறாப்பர்:-** டெங்கு காய்ச்சலால யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை நிரம்பி வழியுது. நிலைமையினைக் கட்டுப்படுத்துறதுக்கான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

**சாத்திரியார்:-** உண்மை தான். டெங்குக் காய்ச்சல் காரணமாக இதுவரையில யாழ்ப்பாணத்தில மூன்று பேர் உயிரிழந்திருக்கினம்.

அதிலும் டெங்குக் காய்ச்சல் காரணமாக வைத்திய சாலையில அனுமதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி ஒருவர் உயிரிழந்த சம்பவம் மருந்துவக் குறைபாட்டால் ஏற்பட்டதென்ற குற்றச் சாட்டும் உண்டு.

மருந்து ஒவ்வாமை எண்டு இறப்புக்கான காரணம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அப்படியொரு மருந்து ஒவ்வாமை ஏதும் தங்கட பிள்ளைக்கு இல்லை என அந்தப் பிள்ளையின் பெற்றோர் கூறுகினம்.

ஆகையால, இது தொடர்பில சரியான பதில் அளிக்கப்பட வேணும். இல்லையெண்டால், எங்கட மருத்துவர்கள் மீதான நம்பிக்கை சடுதியாகச் சரியத் தொடங்கி விடும்.

**கங்காணி:-** என்ன இருந்தாலும் வீதிகளில குப்பை போடுகிறவர்கள் செய்யிற அநியாயம் கொஞ்சமல்ல. தங்கட வீட்டுக் கழிவுகளை வீதிகளில கொட்டிப் போட்டு போற மனநிலை இருக்கிறவியள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நாம் அனுமானிக்க முடியும்.

**சிறாப்பர்:-** ஏன்? மூப்பர் வீதிகளில குப்பை போட வேண்டாம் எண்டு இறுக்கமான அறிவித்தலை விடுக்கிறது. அதற்கும் சரிவராவிட்டால், சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யிறதுக்கு நடவடிக்கை எடுக்கிறது.

இதைச் செய்யிறதுக்கு வடக்கு மாகாண ஆளுநர் தயாரில்லை. உண்மையில என்னைப் பொறுத்த வரையில வடக்கு மாகாணத்தில ஒரு நேர்மையான சிங்களவர் ஆளுநராக இருப்பது தான் நல்லது.

அப்படி ஒரு சிங்களவர் இருந்தால், அவர் தான் சரியாக வேலை செய்ய வேணுமெண்டு நினைப்பார்.



## வடக்கு மாகாண ஆளுநராக சிங்களவர் இருப்பதே நல்லது

வடக்கின் நிலைமையை அரசாங்கத்திட்ட எடுத்துக்கூறி, சில நடவடிக்கைகளை முன்னெடுப்பார். ஆனால் நாங்கள் எங்கட வடக்கில தமிழர் ஒருவர் தான் ஆளுநராக இருக்க வேணும் எண்டு கேட்டு உள்ளதையும் கெடுத்தது தான் மிச்சம்.

**சாத்திரியார்:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:-** வடக்கு மாகாண நிர்வாகம் படு மோசமாகப் போயிற்றுது. அரசாங்கம் தங்களைக் குறை சொல்லக் கூடாது என்பதில வடக்கின் தமிழ் ஆளுநர்கள் கவனமாக இருந்தினமே தவிர, வட மாகாணத்தின்ர அபிவிருத்தி பற்றிய சிந்தனை அவர்களிட்ட இம்மியும் இல்லை.

சரி, அபிவிருத்தி பற்றிய நினைப்புத் தான் இல்லையெண்டால், நிர்வாகமும் தலைகீழாகத் தானே நடக்குது.

உதுகள் ஒண்டையும் ஆளுநர் கவனிப்பதாக இல்லை.

**விதானையார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள், ஆனால் வடக்கு மாகாணத்தில என்ன நடக்குது ஏது நடக்குது என்பது உங்களுக்குத் தெரியாதோ. இப்ப மத ரீதியான நிர்வாகம் தான் வடக்கு மாகாணத்தில நடக்குது.

**கங்காணி:-** நடக்கட்டும்... நடக்கட்டும்... எங்கட தமிழ் அரசியல்வாதிகள் இரட்டை வேடம் போடுகினம். பௌத்த மதத்தால சைவத்துக்கு இடைஞ்சல் எண்டால் தான் அவர்கள் குரல் கொடுப்பினம். மற்றும்படி சைவ சமயத்திற்கு வேறு யாரால இடைஞ்சல் வந்தாலும் அது பற்றி அவர்கள் வாய் திறக்க மாட்டினம். அப்படி வாய் திறந்தால், வாக்குகளை இழக்க வேண்டி வருமல்லோ.

**மூப்பர்:-** எங்கட தமிழ் மக்கள் மத்தியில சமயக் காழ்ப்புணர்வு எதுவும் கிடையாது.

என்னைப் பொறுத்த வரையில ஒரு குறிப்பிட்ட, மதத் தலைவர்களிடமும் அதிகாரிகளிடமும் தான் மதவாத சிந்தனை இருக்குது. இப்படியான சிந்தனை எங்கட தமிழ் இனத்தின்ர ஒற்றுமைக்கும் பலத்திற்கும் ஈனம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர வேணும்.

அண்மையில தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மார்கழிப் பெருவிழாவை நடத்தியது.

அதில திருவாசகப் போட்டியில ஒரு கத்தோலிக்க மாணவனுக்குத்தான் மூன்றாமிடம் பரிசு கிடைத்தது.

நெடுந்தீவைச் சொந்த இடமாகக் கொண்ட அந்த மாணவன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில பட்டப்படிப்பை மேற்கொள்கிறார்.

தமிழ் மீது கொண்ட பாசம் காரணமாகவே திருவாசகத்தை தான் படித்ததாக அவர் கூறிய போது, அந்த அரங்கில இருந்தவர்கள் அனைவரும் நெகிழ்ந்து போயிற்றினம்.

**பண்டிதர்:-** உண்மை தான். தமிழ் பக்தி மொழி. பன்னிரு திருமுறைகளும் திவ்ய பிரபந்தங்களும் இதிகாசங்களும் தான் தமிழ் மொழியின் தாங்கு தூண். ஆகையால, தமிழ் வாழ வேணும் எண்டு நினைக்கிறவர்கள் சைவம் வாழ வேணும் எண்டு நினைப்பினம்.

ஆனால், சிலபேர் தமிழ் வேறு. சைவம் வேறு எண்டு சித்தார்ந்தம் பேசுவினம்.

உண்மையில தமிழ் வாழ வேணும்மெண்டால், சைவம் வாழ வேணும். இதுதான் உண்மை. இவ்வாறு பண்டிதர் உணர்வு பூர்வமாகக் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு-கிழக்குப் பிரதேசங்களை சிங்கள மக்களிடம் இருந்து பிரிப்பதற்கு சதி நடக்கிறது என்று சரத் வீரசேகர கூறுகின்றாரே?

**திகான் வடமராட்சி**

**வியாசர் அவர்களே உங்கள் வாழ்க்கைச் செலவுக்கு வருமானம் போதுமானதாக உண்டா?**

வருமானம் போதவில்லை என்பதற்காக வாழ்வை குறுக்கிவிட முடியாது. இனி ஒருபோதும் எமக்கு இந்த மனிதப் பிறவி கிடைக்கப்போவதில்லை.
அதனால் பேராசைகளைத் துறந்து எம்மிடம் எவ்வளவு இருக்கிறதோ அந்தளவுக்குள் அடங்கி வாழ்ந்து பழகிக் கொள்வோம். குடும்பத்துடன் குதூகலமாய் இருக்க சுற்றுலாதான் போக வேண்டும் என்றில்லை. பௌர்ணமி நிலவில் முற்றத்தில் பாய் விரித்து குடும்பத்துடன் இருந்து மனம்விட்டுப்பேசி இருக்கும் உணவை பகிர்ந்து உண்டாலே போதுமான மகிழ்வைத் தந்துவிடும்.

**மதுவன் மீசாலை**

**வடக்கு-கிழக்குப் பிரதேசங்களை சிங்கள மக்களிடம் இருந்து பிரிப்பதற்கு சதி நடக்கிறது என்று சரத் வீரசேகர கூறுகின்றாரே?**

ஒரு திரைப்படத்தில் கடை உரிமையாளருக்கு கதை கொடுத்துக் கொண்டே கடையில் இருந்த தராசை வடிவேலு ஆட்டையைப்போட்டுவிடுவார். அதைவிற்றுவிட்டு வரும்போது கடைக்காரன் வந்து தனது தராசு தொலைந்து விட்டது அதன் விலை 5000 ரூபா என்பார்.
அதிர்ச்சி அடைந்த வடிவேலு அடேய் நாம மோசம் போய்ட்டம்டா 5000 ரூபா தராசை 1500 இற்கு வாங்கி நம்மை ஏமாத்திட்டான்டா என்றபடி ஓடுவார்.
அதற்கு கடை உரிமையாளர் கூறுவார். நான் சொல்ல வேண்டிய கதையை அவன் சொல்லிட்டுப் போறான் என்று.
சரத் வீரசேகர கூறுவதும் இதுபோலத் தான். கடைக்காரன் தமிழ் மக்கள். தராசை கழவெடுத்த வடிவேலு சிங்கள மக்கள்.

**சுரேன் பத்தமேனி**

**சிறந்த நேர்மையான அரசியல்வாதிகள் இருக்கிறார்களா வியாசரே?**

முன்பொரு காலத்திலேயே கஞ்சிக்குள் பயறு போல இருந்தவர்களைப் பற்றி இப்போது கேட்டால் என்னத்தைக் கூறி விட முடியும்.
பயறு போட்டுக் காய்ச்சாத கஞ்சிக்குள் பயறைத் தேடினால் கிடைக்குமா தம்பி?
கிடைக்காதல்லவா?
இதுபோலத்தான் சுயநலம் இல்லாத பொது நல அரசியல் வாதியைத் தேடுவதும்.
இதை நாம் கூறும்போது இங்கு பலருக்குப் பொத்திக் கொண்டு கோபம் வரும்.
வரட்டும்.கோபம் வருபவர்கள் அரசியலுக்கு வரமுன் இருந்த சொத்தையும் அரசியலுக்கு வந்த பின் இருக்கும் சொத்தையும் வெளியிடுங்கள் பார்ப்போம்.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சிவயோகன் புளியங்குளம்**

**இந்த உலகில் பணம், பொருள், பொன் என்பவற்றை விரும்பாத மனிதர்கள் இருக்கிறார்களா?**

மனிதன் என்னதான் சொத்தின் மேல் சொத்தைச் சேர்த்தாலும் பணத்தை வைத்து கோட்டை கட்டினாலும் பொன் பொருளை வைத்து மலை அமைத்தாலும் எதையும் கொண்டு செல்லப்போவதில்லை.
அண்ணாமலை படத்தில் ஏழையாக இருக்கும் போது இருந்த இன்பத்தை பணக்காரனாகி தொலைத்துவிட்டேன் என்பதை அருமையாகக் கூறியிருப்பார் வைரமுத்து.
"கட்டாந்தரையில் ஒருதுண்டை விரித்தேன் தூக்கம் கண்ணைத் தொட்டதே அது அந்தக் காலம்.
மெத்தை விரித்தும் சுத்தப் பன்னீர் தெளித்தும் தூக்கம் கண்ணில் இல்லையே அது இந்தக் காலமே.
என் தேவனே தூக்கம் கொடு. மீண்டும் அந்த வாழ்க்கை கொடு."
பணம் பணம் என்று அலைபவர்களுக்கு இதைவிட வேறு எதையும் கூறிவிட முடியாது.



வியாசர் அவர்களே உங்கள் வாழ்க்கைச் செலவுக்கு வருமானம் போதுமானதாக உண்டா?

**டனுஷாந்-ராசா திருநெல்வேலி**

**சம்பந்தர் ஐயாவுக்கு வயது 90 ஐ எட்டிவிட்டது. அவர் அரசியலில் இருந்து விலகுவாரா?**

போகிற போக்கைப்பார்த்தால் அவ்வாறு தெரியவில்லையே.பொறுத்திருந்து பொறுத்திருந்து பார்த்த சிலர் பொங்கி எழுந்தவை.
ஆனால் அந்தப் பொங்கலுக்கெல்லாம் ஐயா அசைந்து கொடுக்கவில்லை.
ஆதலால் அவர் செல்லும் இடங்களை பகிஸ்கரிக்கத் தடைப்பட்டு விட்டனர் சிலர். என்ன புரிகிறதா?

**கணேஸ் பருத்தித்துறை**

**நல்லிணக்கத்தை காண்பித்து தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள் என ரணிலிடம் இடித்துரைத்திருக்கிறாரே இரா.சம்பந்தன்?**

நான் அடிப்பது போல அடிக்கிறேன் நீ அழுவதுபோல அழு என்றொரு விடயம் உண்டல்லவா? அதுவே தான் இதுவும். அதாவது மற்றவர்களுக்குப் பார்க்கும் போது அடிவிழுவதுபோல இருக்கும் ஆனால் அடி விழாது.
அழுபவரும் அடிவிழுந்து அழுவது போல அழுவார்.ஆனால் அவர் அழுகை உண்மை அல்ல.
ரணில் மாத்தையா உங்களை நான் இடித்துரைப்பது போல உரத்துக் கூறுகிறேன். நீங்கள் இது பற்றிக் கோபித்துக் கொள்ளக் கூடாது.
அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா.

**பிரபா அத்தியடி**


**மூன்றாம் உலகப் போர் வெடிக்கும் இதைத் தடுக்க என்னால் மட்டுமே முடியும் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி தெரிவித்திருந்தாரே?**

மூன்றாம் உலகப் போர் வெடிக்கப் போவது உண்மை தான்.
ஆனால் அதை ட்ரம்பினால் தடுக்க முடியுமா என்பது தான் கேள்விக்குறி.
அமெரிக்கர்களிடம் அமெரிக்க வாதம் உண்டு.வெளிநாட்டவர்களிடமே அமெரிக்க எதிர்ப்புவாதம் உண்டு.
இதில் அமெரிக்கா அனைத்திற்கும் முந்திரிபோல முந்தி நிற்பது எவருக்கும் பிடிக்கவும் இல்லை.
மூன்றாம் உலகப் போர் வெடிக்கப் போவது என்னவோ அமெரிக்காவினால் தான் என்பது மட்டும் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**படம் : அன்னை**
**பாடியவர் : சந்திரபாபு**
**பாடல் வரிகள் : கண்ணதாசன்**
**இசை : ச.சுதர்சனம்**



பருவம் வந்த அனைவருமே காதல் கொள்வதில்லை
காதல் கொண்ட அனைவருமே மணம் முடிப்பதில்லை
மணம் முடித்த அனைவருமே சேர்ந்து வாழ்வதில்லை
சேர்ந்து வாழும் அனைவருமே சேர்ந்து போவதில்லை

புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலியில்லை புத்திசாலியில்லை
புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலியில்லை புத்திசாலியில்லை

பணமிருக்கும் மனிதரிடம் மனமிருப்பதில்லை
மனமிருக்கும் மனிதரிடம் பணமிருப்பதில்லை
பணம் படைத்த வீட்டினிலே வந்ததெல்லாம் சொந்தம்
பணமில்லாத மனிதருக்கு சொந்தமெல்லம் துன்பம்

புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலியில்லை புத்திசாலியில்லை

பருவம் வந்த அனைவருமே காதல் கொள்வதில்லை
காதல் கொண்ட அனைவருமே மணம் முடிப்பதில்லை
மணம் முடித்த அனைவருமே சேர்ந்து வாழ்வதில்லை
சேர்ந்து வாழும் அனைவருமே சேர்ந்து போவதில்லை

புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலியில்லை புத்திசாலியில்லை

கனவு காணும் மனிதனுக்கு
நினைப்பதெல்லாம் கனவு
அவன் காணுகின்ற கனவினிலே
வருவதெல்லாம் உறவு
அவன் கனவில் அவள் வருவாள்
அவனை பார்த்து சிரிப்பாள்
அவள் கனவில் யார் வருவார்
யாரை பார்த்து அழைப்பாள்?

புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலியில்லை புத்திசாலியில்லை

# 45 கோடிக்கு ஏலம்போன ஸ்டார் ப்ளேயர்கள்... சாதிப்பார்களா?

அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டதாலேயே அந்த வீரர் சிறப்பாகச் செயற்படுவார் என்று-எந்த கேரண்டியும் கிடையாது.

ஐ.பி.எல் மினி ஏலம் நடந்து முடிந்திருக்கிறது. வீரர்கள் பலரையும் கோடிகளைக் கொட்டி அணிகள் வாங்கியிருக்கின்றன. அவுஸ்திரேலிய வீரர்களான ஸ்டார்க், பேட் கம்மின்ஸ் இருவரும் புது வரலாறே படைத்துவிட்டனர். ஐ.பி.எல் வரலாற்றில் இதுவரை எந்த வீரருக்கும் கொடுக்காத விலையை இவர்களுக்கு அணிகள் கொடுத்திருக்கின்றன.

பேட் கம்மின்ஸ், 20.5 கோடி ரூபாய்க்கு சன்ரைசர்ஸ் அணியால் வாங்கப்பட்டுள்ளார். ஸ்டார்க், 24.75 கோடிக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியால் வாங்கப்பட்டுள்ளார். இந்த இருவர் மட்டுமே இந்த முறை 45.25 கோடி ரூபாய்க்கு ஏலம் போயிருக்கின்றனர். அதாவது, ஒரு ஐ.பி.எல் அணியின் பாதி பட்ஜெட்டை இவர்கள் இருவரின் மீதும் முதலீடு செய்திருக்கின்றனர். இவ்வளவு பெரிய முதலீட்டிற்கு இவர்கள் தகுதியானவர்கள்தானா எனும் கேள்விதான் இப்போது எழுந்துள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் கப்டனாக கம்மின்ஸ் கலக்கிவருகிறார். ஆஷஸை வென்றுவிட்டார். அணியை உலக டெஸ்ட் சாம்பியன் ஆக்கிவிட்டார். மீண்டும் உலகக்கோப்பையை அவுஸ்திரேலியாவிற்கே எடுத்துச் சென்றுவிட்டார். ஒரு கப்டனாக இன்றைய திகதிக்கு கம்மின்ஸ் பக்கம்தான் முழுமையாகக் காற்று வீசிக்கொண்டிருக்கிறது. சன்ரைசர்ஸ் அணிக்கும் ஒரு ஸ்டார் கப்டன் தேவைப்பட்டார். இதற்கு முன் டேவிட் வார்னர் சன்ரைசர்ஸின் முகமாக இருந்தார். ஆனால், அணி நிர்வாகத்திற்கு அவருக்கும் சரிப்பட்டே போகவில்லை. வெற்றிகளின்போது ஆரத்தழுவிய அணி நிர்வாகம் தோல்விகளின் போது உடன் நின்று தோள் கொடுக்கவில்லை. கேன் வில்லியம்சனையும் அவர்களால் கப்டனாகத் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை. இப்போது, எய்டன் மார்க்ரம் கப்டனாக இருக்கிறார். அவர் திறன் படைத்தவர்தான். ஆனால், அணியின் முகமாக நிற்கும் அளவுக்கு அவருக்கு நட்சத்திர அந்தஸ்து இல்லை. பேட் கம்மின்ஸுக்கு இதனால்தான் 20.5 கோடியை சன்ரைசர்ஸ் கொட்டிக் கொடுத்திருக்கிறது.

ஒரு உலகக்கோப்பையை வென்ற கப்டனை அதே உற்சாகத்தில் தங்கள் அணியின் கப்டனாகவும் மாற்றிக்கொள்ள எந்த அணிதான் விரும்பாது? அதனால்தான் ஐ.பி.எல் வரலாற்றிலேயே 20 கோடிக்கு மேல் ஏலம் கேட்கப்பட்ட முதல் வீரர் எனும் பெருமையையும் பெற்றார். கப்டனாக அசத்தினாலும் ஒரு வீரராக ஐ.பி.எல் இல் அவர் இன்னும் முழுமையான செயற்பாட்டைக் கொடுக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக நன்றாக ஆடியிருக்கிறார். 20 கோடியை முத்திரையாகக் குத்திக் கொண்டு ஆடும்போது, சன்ரைசர்ஸ் அவரிடம் ஒரு ஆல்ரவுண்டராகவும் நல்ல செயற்பாடுகளை எதிர்பார்க்கும்.

ஐ.பி.எல் வரலாற்றிலேயே அதிக தொகைக்கு ஏலம் போன வீரர் எனும் சாதனையை ஸ்டார்க் செய்திருக்கிறார். நட்சத்திரமாக இருப்பதால் இவ்வளவு தொகை என்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், ஸ்டார்க்கின் சமீபத்திய ஃபார்மையும் ஐ.பி.எல்-இல் அவரின் ட்ராக் ரெக்கார்டையும் பார்க்கையில் இந்தத் தொகை அதிகம் என்றே தோன்றும்.

இதற்கு முன் இரண்டே இரண்டு ஐ.பி.எல் சீசன்களில்தான் ஸ்டார்க் ஆடியிருக்கிறார். பெங்களூர் அணியால் 5 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்டு, அந்த அணிக்கு 2014, 2015 சீசன்களில் ஆடினார். 34 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நல்ல பெர்ஃபாமென்ஸ்தான். ஆனால், அடுத்த 2016 சீசனில் காயம் காரணமாக ஆட முடியவில்லை. 2017 சீசனில் வேலைப்பளு காரணமாக முடியாது எனக் கூறிவிட்டார். 2018இல் கொல்கத்தா அணி அவரை 9.4 கோடிக்கு ஏலத்தில் வாங்கியது. அந்த சீசனிலும் காயம் காரணமாக அவர் முழுமையாக ஆடவில்லை. கொல்கத்தா அணி அவருடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது. உலகக்கோப்பை இருப்பதால் 2019 சீசனுக்கும் வர முடியாது எனக் கூறிவிட்டார். 2020, 2021, 2022 ஆகிய 3 சீசன்களிலும் ஐ.பி.எல் மீது அவர் நாட்டம் காட்டவே இல்லை.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் பிக்பேஸ் லீகிலுமே அவர் பெரிதாக ஆடியதில்லை. 2011-2014 காலகட்டத்தில்தான் ஆடியிருக்கிறார். அதன்பிறகு அந்தப் பக்கமும் செல்லவில்லை. நடப்பு ஆண்டில் அவுஸ்திரேலிய அணிக்காகவும் ஒரு  இருபது-20 போட்டியில்கூட ஆடவில்லை. சமீபத்தில் முடிந்த உலகக் கோப்பையிலுமே 10 விக்கெட்டுகளை மட்டுமே எடுத்திருந்தார். இதே ஸ்டார்க் 2015, 2019 உலகக்கோப்பைகளில் 20+ விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். அந்த ஃபார்மில் இப்போது அவரும் இல்லை. கடந்த ஆண்டு நடந்த இருபது-20 உலகக்கோப்பையில் ஒரு முக்கியமான போட்டியில் அவுஸ்திரேலிய அணியே ஸ்டார்க்கை ட்ராப் செய்துவிட்டு இறங்கியது.

நிலைமை இப்படியிருக்க நட்சத்திர அந்தஸ்தை மனதில் வைத்து அவருக்கு இவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. 'இருபது-20' உலகக்கோப்பைக்குத் தயாராக ஐ.பி.எல் உதவும்" என ஸ்டார்க் கூறியிருக்கிறார். உலகக்கோப்பைக்கான பயிற்சிக் களமாக இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது ஸ்டார்க்கின் எண்ணம். அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்ட தாலேயே அந்த வீரர் சிறப்பாகச் செயற்படுவார் என்று எந்த கேரண்டியும் கிடையாது. இப்படிப் புருவம் உயர்த்த வைத்தவர்கள், பல சமயங்களில் சொதப்பவே செய் துள்ளனர்.

ஆக, ஸ்டார்க் மற்றும் கம்மின்ஸ் இருவருக்கும் வருகிற சீசனில் பெரிய சவால் காத்திருக்கிறது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஜயகாந்த் நடிகர் முதல் தலைவர் வரை!

சினிமா, அரசியல் என முன்னணித் துறைகளில் பல சாதனைகளைச் செய்தவர் விஜயகாந்த். புரட்சிக் கலைஞராக திரைத்துறையில் லட்சக் கணக்கான ரசிகர் பட்டாளத்தைச் சம்பாதித்தவர். கப்டனாக தமிழக அரசியல் களத்திலும் புகுந்து கோடிக்கணக்கான மக்கள் மனதிலும் நீங்கா இடம்பிடித்தவர்.

"விஜயகாந்த்" - மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952 ஆம் ஆண்டு, ஒகஸ்ட் 25 ஆம் திகதி அழகர்சாமி - ஆண்டாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். சிறுவயது முதலே பள்ளிப் படிப்பைவிட சினிமா மீதான பிடிப்பே விஜயகாந்த்தை ஊட்டி வளர்க்க பத்தாம் வகுப்போடு நின்று போனது அவர் படிப்பு. அதன் பிறகு, கீரைத் துறையிலுள்ள அவருடைய தந்தையின் அரிசி ஆலையில் வேலைசெய்தவர், தன் நண்பர்களின் உந்துதலால் சினிமாவில் நடிப்பதற்கு வாய்ப்பு கேட்டு சென்னைக்கு இடம்பெயர்ந்தார். பல்வேறு அவமானங்கள், புறக்கணிப்புகளுக்கு மத்தியில், 1979 ஆம் ஆண்டு எம்.ஏ.காஜாவின் இயக்கத்தில் வெளியான "இனிக்கும் இளமை" படத்தில் நடிகனாகத் தனது திரைப்பயணத்தைத் தொடங்கினார்.

தொடர்ந்து 'சட்டம் ஒரு இருட்டறை', 'தூரத்து இடி முழக்கம்', 'உழவன் மகன்', 'சிவப்பு மல்லி' என வெற்றிப்படங்களைக் கொடுத்து தமிழின் முன்னணிக் கதாநாயகனாக வலம்வந்தார். கிட்டத்தட்ட 150இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்த விஜயகாந்த், 1984இல் மட்டும் ஒரே ஆண்டில் 18 படங்களில் நடித்து சினிமாத்துறையில் வரலாற்றுச் சாதனை புரிந்தார். 'புரட்சிக் கலைஞர்' என்ற பட்டத்துடன் தனது 100 ஆவது படமான 'கப்டன் பிரபாகரன்' படத்திலிருந்து 'கப்டன்' என்ற அடைமொழியும் அவருக்குச் சேர்ந்துகொண்டது.

விஜயகாந்த்தின் திறமையும் குணாதிசயமும் அவரை 1999ஆம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவராக்கின.



பல ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த நடிகர் சங்கக் கடனை சிங்கப்பூர், மலேசியா எனத் தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திரக் கலை விழாக்கள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார். மேலும், நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவி செய்வதற்காக ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்து பெரும் தொகையை வங்கியில் டெபாசிட் செய்தார். 2002 ஆம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்சினை உச்சத்தில் இருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து "நீர் தராத கர்நாடகாவுக்கு மின்சாரம் இல்லை!" என்கிற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலியில் நடத்தினார். ஏற்கெனவே நடிகராக இருந்தபோதே 1984, 1986 ஆண்டுகளில் ஈழத்தமிழர்களுக்காகப் பல உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தியிருக்கிறார் விஜயகாந்த்.

இவை தவிர, சினிமாத்துறையில் இருக்கும் போதே அரசியல் வாசனை தெரியாதபோதே பல பொதுநல சேவைகளையும் செய்துவந்தார் விஜயகாந்த். 1989 இல் ஈரோட்டில் இலவச மருத்துவமனை, சென்னை சாலிகிராமத்தில் இலவச மருத்துவமனை, ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு லட்சக்கணக்கில் கல்வி நிதியுதவி, எம்.ஜி.ஆர் காது கேளாதோர்-வாய் பேசாதோர் பள்ளி, லிட்டில் ஃபிளவர் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு நன்கொடை, தமிழகம் முழுவதும் 60 இடங்களில் இலவச கணினிப் பயிற்சி மையம், இலவச திருமண மண்டபங்கள், ஏராளமான ஏழை ஜோடிகளுக்கு இலவச திருமணம், கப்டன் ஸ்போர்ட்ஸ் அகாடமி எனக் கலக்கினார். குஜராத் பூகம்பம், கார்கில் போர், சுனாமி, கும்பகோணம் பள்ளி தீ விபத்து எனப் பல சோக நிகழ்வுகளுக்குத் தன் சொந்தச் செலவில் நிவாரணங்களை கொடுத்து உதவினார்.

அந்த நிலையில்தான், 2000 ஆம் ஆண்டு, பெப்ரவரி 12இல் தனது ரசிகர் மன்றத்துக்கென தனிக்கொடியை அறிமுகப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, 2001 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் பல்வேறு இடங்களில் சுயேச்சையாகப் போட்டியிட்டு, பலர் வெற்றியும் அடைந்தனர். தொடர்ந்து, 2005ஆம் ஆண்டு, செப்டம்பர் 14 ஆம் திகதி மிகப்பெரிய மாநாட்டை மதுரையில் நடத்தி, "தேசிய முற்போக்கு திராவிட கழகம்" எனும் அரசியல் கட்சியைத் தொடங்கினார் விஜயகாந்த். கட்சி ஆரம்பித்து ஓராண்டு நிறைவடையாத நிலையில், 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர், தான் போட்டியிட்ட விருத்தாசலம் தொகுதியில் அமோக வெற்றிபெற்றார். மற்ற வேட்பாளர்கள் தோல்வியடைந்தாலும் கணிசமான வாக்குகளைப் பெற்று, தே.மு.தி.க-வுக்கு 8.4 சதவிகித வாக்குகளைப் பெற்றுத்தந்தனர். அதைத் தொடர்ந்து, 2009 இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் தனித்து நின்று, தோல்வியைத் தழுவினாலும் 10 சதவிகித வாக்குகளை தே.மு.தி.க பெற்றது.

தனித்தே போட்டியிட்டுவந்த நிலையில், முதன்முறையாக 2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்த விஜயகாந்த், 29 இடங்களில் வெற்றிபெற்று தி.மு.க-வையே பின்னுக்குத் தள்ளி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார். அதன் பிறகு அரசியலிலும் விஜயகாந்தின் உடல்நிலையிலும் இறங்கு முகம்தான் ஏற்பட்டது. 2014 பாராளுமன்றத் தேர்தல், 2016 சட்டமன்றத் தேர்தல், 2019 பாராளுமன்றத்தேர்தல், 2021 சட்ட மன்றத் தேர்தல் வரை விஜயகாந்தின் தே.மு.தி.க படுதோல்வியைச் சந்தித்தது. அதேபோல, 2021 தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க முடியாத அளவுக்கு விஜயகாந்தின் உடல்நிலையும் சோர்வடைந்தது. தொடர்ந்து மருத்துவ சிகிச்சைகள் எடுத்துவந்தார்.

இந்த நிலையில்தான், கடந்த மாதம் 18ஆம் திகதி திடீர் உடல்நலக்குறைவு காரணமாக சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள மியாட் மருத்துவமனையில் விஜயகாந்த் அனுமதிக்கப்பட்டார். 'வழக்கமான மருத்துவப் பரிசோதனைதான், ஓரிரு நாட்களில் வீடு திரும்புவார்' என தே.மு.தி.க தலைமைக் கழகம் தெரிவித்துவந்த நிலையில், 29-11-2023 அன்று மியாட் மருத்துவமனை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியது. விஜயகாந்த்தின் உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. எனினும், கடந்த 24 மணி நேரத்தில் அவரது உடல்நிலை சீரான நிலையில் இல்லாததால், அவருக்கு நுரையீரல் சிகிச்சைக்கான உதவி தேவைப்படுகிறது. அவர் விரைவில் பூரண உடல்நலம் பெறுவார் என்று நம்புகிறோம். அவருக்கு இன்னும் 14 நாட்கள் மருத்துவ மனையில் தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது. எனினும், அதிலிருந்து மீண்டு வந்த விஜயகாந்த் வீடு திரும்பினார்.

அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பிறகு, தே.மு.தி.க தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் குறித்த அறிவிப்பு வெளியானது. அதன்படி கடந்த 14-ம் திகதி நடந்த கட்சிப் பொதுக்குழுக் கூட்டத்தில் விஜயகாந்த் முன்னிலையில் பொதுச் செயலாளராக அறிவிக்கப்பட்டார், பிரேமலதா. பின்னர் விஜயகாந்தின் காலில் விழுந்து ஆசியும் பெற்றார். இந்த நிலையில், மீண்டும் உடல்நலக் குறைவால் விஜயகாந்த் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில்தான் அந்தத் துயரச் செய்தி மருத்துவமனை அறிக்கை வழியாக வந்தது. "உடல்நிலை சீரற்ற நிலையில், மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்துக்கு நிமோனியா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. ஏற்கெனவே நுரையீரல் தொற்று இருந்த நிலையில், அவருக்கு மூச்சுவிடுவதில் சிரமம் இருந்தது. அதனால் அவருக்கு வென்டி லேட்டர் பொருத்தி தீவிர சிகிச்சையளிக்கப்பட்டுவந்தது. இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம்

மெய் சுமக்க மறுக்கும் மனம்
பொய் சுமக்க மறுப்பதில்லை
பொய் சுமக்க துணிந்த மனம்
மெய் சுமக்க மறுப்பதேனோ

உனை படைத்த இறைவனிடம்
ஒரு வார்த்தை சொல்லிவிடு
உன் படைப்பில் பிழையென
ஊர் இங்கு சொல்லுதென

இறைவா உன் படைப்பில்
பிழையெனில் என்படைப்பு என்னவாகும்
எனக்கு புரியவில்லை
இருந்தும் சோர்வடைய போவதில்லை
உன் படைப்பில் வந்தவன் நான்
உருக்குலைந்து போவேனோ

பொய் இங்கு வாழுமெனில்
மெய் எவ்வண்ணம் வாழ்ந்துவிடும்
புலப்படவில்லை என் புத்திக்கே
என்ன செய்வேன் காத்திருக்கிறேன்
புலரும் பொழுதுக்காய்
பொய் இங்கு வாழாமல்
மெய் இவ்வுலகில் வாழுமென



பி.துரையரசன்,
ஒட்டுசுட்டான்.

## விடியலைத் தேடி

உணர்வுகள் பூத்த மனதில்
எழுந்திடும் எண்ணங்கள்
பல வடிவங்களாய்
காவியம் படைக்க
காத்துக் கிடக்கிறது
சாதனைகள் பல இருந்தும்
முட்கள் நிறைந்த பாதை
வலிகள் சுமக்கும் கால்கள்
ஏங்கி ஏங்கி கண்களில்
கரைந்தோடுகிறது கண்ணீர்
தேற்றிடவும் யாருமில்லை
அணைத்து ஆறுதல் சொல்ல
சொந்தங்களும் இங்கில்லை
அநாதைகளாய் தெருவோரம்
பலரிடமும் கையேந்தி கறைபடிந்த
உடையோடு விடியலுக்காய் ஏங்கியபடி .


சி.இன்பராஜ்,
மந்துவில்.

## ஜனனம் தேவை மனதில்

இரவுகளும் பகல்களுமென
காலச்சக்கரம் உருண்டு
பன்னிரெண்டு திங்களில்
ஆண்டுகள் மாறுவது
இயற்கையின் நியதி
மாற்றங்கள் பல செய்து
விண்முட்டும் புவியில்
வியத்தகு விந்தைகள் புரிவது
மாந்தவர் அறிவு வளர்ச்சி
மாற்றங்கள் புதிது புதிதாய்
உருவாக்கி உலகில்
உயர்ந்த மனிதரவர்
தம் மனதை மட்டும்
விச நிலையில் வைத்துள்ளனரே!
வக்கிர பழி வாங்கல்களும்
நன்றி சொல்லும் துரோகங்களும்
அனலாய் எரிச்சலும் பொறாமையும்
இன்னும் எத்தனை விதங்களில்
விசங்களை எம்மனங்களில்
விதைத்துள்ள பொல்லாதவராயுள்
ளோம்
நச்சுகளற்றி மனங்களை
தூய்மையாக்கி நாம்
புதுப்பிறப்பாக வில்லையெனில்
பிறப்புக்கெல்லாமே
வெளிவேடப் போலியாகி
மனிதமுற்ற பாழ்நிலைதான்
தொடர்கதையாகும்.

சி.இ.அன்புதுரை, மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 696



## வெற்றியைத் தேடி

திறமை எதுவென்று
உணர்ந்து கொள்ளாதவன்
இதுதான் திறமையென்று
விடிவின்றிக் கிடப்பான்
ஒரு சிறுமாற்றம் போதும்
வெற்றிக் கனியை எட்டிப் பறிக்க
என்பைதப் புரிந்தாலே போதும்

கே. ஹரிஷ்,
தெல்லிப்பழை.

## திறமை

வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடும் என்பதற்கமைய
தன் சுயசிந்தனைத் திறனால் கடின
வேலைதனையும் இலகுவாகச் செய்து முடிக்கும்
திறனே அரும்பெரும் திறன்.

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 697



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்
ஏனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## தமிழரும் சீனரும்

போட்டி போட்டு தளத்தில்
வியர்க்க வியர்க்க
பொட்டியைத் தள்ளும் இவர்கள்
நிச்சயம் தமிழர்தான்
அதோ! சிரமம் இல்லாது
உருட்டிச் செல்கிறாரே
அவர் ஒரு சீனர்

பி.மதுஷ்சன்,
தைபிட்டி.

## புத்திமான் பலவான்

சிறுபிள்ளை வேளாண்மை
வீடு வந்து சேராது என்பதை அறியாயோ?
காளைப் பருவம் தன்னில் கனதியான பொருளையும்
அசைக்கும் திறன் உண்டென்பதை
அழுத்தமாக கூறினாலும் பயனேதும் இல்லை
எமது எண்ணங்கள் எதிர்மறை எண்ணமாக இருந்தால்
எதிர்நீச்சல் அடித்தாலும் சாதிக்க முடியாது
சிந்தனை சொல் செயல் மூன்றும் சேர்ந்து
சிறப்பான நேர் எண்ணமாக இருந்தால்
காரியத்தை சாதிக்க முடியும்
கத்தியை தீட்டு முன் புத்தியைத் தீட்டி
கத்தியால் கனவுருவை கோள வடிவமாக்கி
இலகுவாக நெடுந்தூரம் சென்று
இன்பமாக காரியத்தை சாதிக்க முடியும்
என்பதை நீயும் உணர்ந்திடுவாய்.

ஆ.செல்வி,
திருநாவலூர்.

## அறிவு நேரானால்

பார நகர்வு சிரமமாயின்
அறிவால் இலகுபடுத்தினால்
காரியம் விரைவாகும்
பாரமும் சிரமம் தராது
ஆயினும் மனிதரில் பலர்
காலக்குறைவில் குறுக்கலாக
அநியாய முறையிலேனும்
அதிக பணம் திரட்டலே
தீட்டுகின்றோம் அறிவை

சி.இ.அன்புதுரை,
மானிப்பாய்.

## தோன்றுமா கவிதை!

ஒன்றும் புரியவில்லை எனக்கு
மௌனத்தின் தேடல்-696
தொட்டியைத் தள்ளும் மூவர்
பீப்பாவை உருட்டும் ஒருவர்
கொட்டிக் கிடக்கிறது ஏதோ
கூடவே ஒரு குத்துக் கத்தி
இந்தப் படத்தைப் பார்த்தால்
மனதில் தோன்றுமா கவிதை
மண்டைதான் வலித்தது
பிரமன், கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா



காலத்தின் பதிவு 90

“பின்புறம் திரும்பிப் பாருங்கள்” என்று மட்டும் கூறினாள் அவள்.

பின்புறம் திரும்பிப் பார்த்த இளைய பல்லவனின் விழிகளில் ஆச்சரியம் பெரிதும் படர்ந்தது. கொள்ளைக் கூட்டம் பலமாகக் கூடி தன்னையம் மஞ்சளழகியையும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட இளையபல்லவன் இதயத்தில் ஆச்சரியத்துடன் சினமும் ஏற்படவே, “இதென்ன அநாகரிகம்! ஒரு பெண்ணும் ஆணும் தனித்திருப்பதை வெறித்து வெறித்துப் பார்க்கும் பழக்கம்!” என்று கோபத்துடன் கேட்டான் மஞ்சளழகியை நோக்கி.

“அதுதான் சொன்னேனே முன்பே! இந்த நாட்டுப் பழக்கம் இது” என்றாள் மஞ்சளழகி குரலில் துயரம் தோய.

“என்ன பழக்கம், விளக்கித்தான் சொல்லேன்” என்று வினவினான் இளையபல்லவன் அலுப்புடன்.

“பெண்ணும் ஆணும் தனிப்படச் சேர்ந்து சல்லாபித்திருக்கக் கூடாது இருந்தாலும்…”

“இருந்தால்?”

“அந்தப் பெண்ணை அவன் மணம் செய்து கொள்ள வேண்டும்.”

“செய்துகொள்ள மறுத்தால்?”

“விசாரணைக்கூடம் அமைக்கப்படும்”

“அமைக்கப்பட்டுமே”

“அந்த இருவர் தனியாயிருந்ததற்கு, சாட்சிகள் அழைக்கப்படுவார்கள்.”

“அதைப் புரிந்துகொண்டேன். அந்தச் சாட்சிகளை ஏற்பாடு செய்ய உன் தந்தை கொள்ளைக்காரர்களை அழைத்து நம் இருவரையும் காட்டியிருக்கிறார்.”

“ஆம், அதுதான் அவர் எண்ணம். சாட்சிகள் விசாரிக்கப்பட்டு நீங்கள் குற்றவாளியெனத் தீர்மானிக்கப் படுவீர்கள்.”

“என்ன குற்றம்?”

மஞ்சளழகி தலையைக் குனிந்து கொண்டாள். சற்று தயக்கத்துடன் மெல்லச் சொன்னாள், “என்னைச் சீரழித்த குற்றம்,” என்று.

“பொய்! பொய்! அப்படி வரம்பு மீறி நான் என்ன செய்தேன்?” என்று இளையபல்லவனும் சங்கடத்துடன் பேசினான்.

“வரம்பு மீறினாலும் மீறாவிட்டாலும் மீறியதாகக் குற்றம் சாட்டப்படும் உங்கள் மீது அதை ஜோடித்து நிரூபிக்கும் திறமை என் தந்தைக்கு உண்டு. உங்கள் விடயத்தில் அந்தத் திறமையும் தேவையில்லை,” என்றாள் மஞ்சளழகி.

“ஏன் தேவையில்லை?”

“நாமிருவரும் அத்தனை லட்சணமாக நடந்து கொண்டிருக்கிறோம்.”

## விளங்கிய சம்பத்து

“என்ன தவறுதலாக நடந்துவிட்டோம்?”

“நடன நிகழ்ச்சியின்போது நீங்களும் நானும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதைத் தந்தை கவனித்திருக்கிறார். தந்தை என்ன, எல்லோரும் பார்த்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் தந்தை என்ற முறையை மீறி உங்களை மணந்துகொள்ள என் தந்தை தூண்டுவாரா? அது இருக்கட்டும். இத்தனை நேரம் நாமிருவரும் இருந்த நிலை… நிலை… எந்தத் தவறான பொருளுக்கும் இடங்கொடுக்கும்…” என்று வெட்கத்துடனும் பயத்துடனும் பதில் சொன்னாள் மஞ்சளழகி.

அப்படி நிரூபிக்கப்பட்டால் ஏற்படக்கூடிய ஆபத்து என்ன என்பதை மட்டும் இளைய பல்லவன் அறியாததால் மீண்டும் கேட்டான், “சரி மஞ்சளழகி! விசாரணை நடக்கிறது. என்னைக் குற்றவாளியாகத் தீர்மானிக்கிறார்கள். அப்புறம் என்ன?” என்று.

“ஏற்கெனவே சொன்னேனே, நீங்கள் ஒன்று என்னை மணக்கலாம். அல்லது மரணத்துக்கு உள்ளாகலாமென்று?” எனக் குறிப்பிட்டாள் மஞ்சளழகி.

“என்னைப் பற்றிய விவரங்கள் பல உங்களுக்க ஏற்கெனவே தெரிந்திருக்கின்றன அல்லவா. (தொடரும்)

# நான் வைரமுத்து பேசுகிறேன்… 36

# பாரதியின் பின்புலங்கள்



தொடர்ந்து நாயகன் - நாயகி பாவனையைச் சொல்ல வருகிற வ.வே.சு அய்யர் அவர்கள் அது ஆழ்வார் நாயன்மார்களுக்கும் புதியதன்று என்கிறார்.

உரோமன் கத்தோலிக்க மதத்தில் அடியார் வர்க்கத்தை நாயகியாகவும் கிறிஸ்துவை நாயகனாகவும் கொண்டு பாடும் மரபொன்றுண்டு, பாகவத்தில் கோபிகைகளின் மன உளைச்சலெல்லாம் இந்த பாவனையின் அடியொற்றியே பேசப் பெறுகிறது.

**“மகா பத்திமதியான மீராபாயி உலகத்திலுள்ள ஜீவகோடிகள் அனைத்தும் ஸ்திரீப் பிராயமென்றும் பகவான் ஒருவனே புருஷன் என்றும் பாவித்துப் பக்தி செய்திருக்கிறார்” என்கிறார் அய்யர்.**

(இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக்கத்தில் நடப்பது போன்றது.)

பாரதியின் நாயகன்-நாயகி பாவனைப் பாட்டு முதலில் உணர்வின் விரிவுரையாகத் திகழ்கிறது.

**“தூண்டிற் புழுவினைப் போல் –வெளியே**
**சுடர்வி எக்கினைப் போல**
**நீண்ட பொழுதாக – எனது**
**நெஞ்சந் துடித்த தடீ!”**

என்று தொடங்கும் பாடல் இந்த உலகத்துக் காதலைத்தான் குறிக்கிறது. எனினும் அதன் உள்ளோட்டமான வேகத்தால் இந்தப் பேரண்டித்தின் உயிர்களோடு கலக்கத் துடிக்கும் தீப்பிழம்பாக வடிவெடுக்கிறது.

**“கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ**
**திருபவளச் செவ்வாய்தான்**
**தித்தித் திருக்குமோ**
**மருப்பொசித்த மாயவன்தன்**
**வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன்**
**சொல்லாழி வெண்சங்கே!”**

என்ற ஆண்டாளின் பாட்டில் நேரடியான உணர்ச்சியின் வெளிப்பாடு மொத்தமாக வந்து மோதுகிறது.

ஆனால் பாரதியின் பாவனை உணர்ச்சியோ, நேரடியான உணர்ச்சியிலும் நிமிர்ந்து எழுகிறது.

பாரதியின் பாவனை உணர்ச்சியோ

**பாலுங் கசந்ததடி – சகியே**
**படுக்கை நொந்ததடி!**
**கோலக் கிளிமொழியும் – செவியில்**
**குத்தல் எடுத்தடி!**
**நாலு வைத்தியரும் – இனிமேல்**
**நம்புதற் கில்லையென்றார்**
**பாலத்துச் சோசியனும் – கிரகம்**
**படுத்து மென்றுவிட்டான்!”**

என்று சொந்த வெளிப்பாட்டுணர்ச்சி போலவே நெஞ்சை வருடிக் கொடுக்கிறது.

**“மயக்கந்தரும் ஆண்டாளின் காதற் பாடல்கள், அப்பாடல்களில் காணப் பெறும் பக்திப் பரவசம், நிறைவேறாத காதலால் ஏற்பட்ட பொறுக்கலாற்றாப் பெருந்துன்பம் ஆகியவை பாரதியை அளவிற்கும் மேலாகக் கவர்ந்துவிட்டன. பாரதியார் மானிடக் காதலை ஆன்மிகக் காதலாக்கிப் படுவதற்குக் காரணம் ஆண்டாளின் வசீகர சக்தியே!”**

(பாரதி பாநிலை பக்கம் -135)

என்கிறார் டாக்டர் கா.மீனாட்சி சுந்தரம்.

காதலுற்ற பெண், தன் காதலை வெளிப்படையாக வெளியே சொல்லுதல் மரபில்லை, தமிழிலக்கியத்தில் அதற்கு அனுமதி இல்லை.

பாரதி கூடக் குயிற் பாட்டில்,

**“காதலுற்று வாடுகின்றேன், காதலுற்ற செய்தினை மாதர் உரைத்தால் வழக்கமில்லை என்றறிவேன்”**

(தொடரும்…)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

379

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## ஒருவர் நோய்வாய்ப்பட்டால்...

வைத்தியசாலைகளில் தாம் அவமதிப்புகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாவதாகக் கருதி வைத்தியசாலைகளுக்குச் செல்லாது ஆபத்துக்களை தேடிக் கொள்பவர்கள் எத்தனை பேர்? வைத்தியருக்கு சொல்லும் தனது நோய் நிலை சம்பந்தமான இரகசியத்தன்மை பேணப்படுமா? என்ற சந்தேகத்தில் இக்கட்டான சில உண்மைகளை மறைப்பதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பெரும் தாக்கங்கள் எத்தனை? இரகசியம் பேணப்படவேண்டிய மருத்துவத் தகவல்களைப் பத்திரிகையில் பிரசுரித்து அம்பலப்படுத்தப்படுவதால் ஏற்படும் அவமானத்தால் நிகழ்ந்து வரும் சுகாதாரத் தாக்கங்கள் எத்தனை? தராதரம் குறைந்த மருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படுவதால் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் எத்தனை?

நோயுற்ற ஒருவரின் நோய் சம்பந்தமான தகவல்கள் அனைத்தும் உணர்வபூர்வமானவை. அது சாதாரண நோயாக இருந்தாலும் கடுமையான நோயாக இருந்தாலும் அல்லது அது அவரின் அந்தரங்கங்கள் சம்பந்தப்பட்ட நோயாக இருந்தாலும் அந்த நோய் சம்பந்தமான தவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டியது மருத்துவக் குழுவின் கடமையாகும்.

18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் தமது சுகாதார நிலை சம்பந்தமான தகவல்களை வேறு எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் உரிமை இருக்கின்றது. சம்பந்தப்பட்டவரின் அனுமதி இன்றி அவரின் நெருங்கிய உறவுகளான பெற்றோருக்கோ, கணவன்-மனைவிக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ கூட அவரின் மருத்துவ தகவல்களை தெரிவிக்கும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.

ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவரின் உற்றார், உறவினர், நண்பர்கள், எதிரிகள், விடுப்பு விசாரிப்போர் போன்ற பலதரப்பட்டவர்களும் கூட்டமாகவும் தனித்தனியாகவும் நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் மருத்துவக்குழுவிடம் நோயுற்றவரின் நோய்நிலை சம்பந்தமாக வினவுவது ஒரு சாதாரண நிகழ்வாக இருந்து வருகின்றது. அத்துடன் நிவாரணம் பெறுவதற்கும் குடும்ப உறுப்பினர்கள் விசா பெறுவதற்கும் குடும்பபத்தவரின் தொழில் இடமாற்றம் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கும் நோயுற்றவரின் இரகசியமான மருத்துவத் தகவல்களை கடிதம் மூலம் எழுதித்தருமாறு கேட்டு வைத்தியரிடம் படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

சில சமயம் பத்திரிகைகள் கூட நோயுற்றவர்களின் அந்தரங்கங்கள் அம்பலப் படுத்துவதற்கு காரணமாக அமைகின்றன. உதாரணமாக "AIDS நோயாளி வைத்தியசாலையில் அனுமதி" "பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்ட சிறுமிக்கு சிகிச்சை" "சட்டவிரோத கருகலைப்பு பெண் ஆபத்தான நிலையில் அனுமதி" போன்ற செய்திகள் சர்வ சாதரணமாகி வருகின்றது.

தமது நோய்நிலை அம்பலப்படுத்தப் பட்டுவிடும் என்று அஞ்சிபலர் தமது நோய் நிலையின் உண்மையான வடிவத்தை மருத்துவரிடம் வெளிப்படுத்த தயங்குகின்றனர். இதனால் பல பாரதூரமான விளைவுகளும் ஏன் இறப்புகளும் கூட ஏற்பட்டுவருகின்றன.

மருத்துவக்குழு நோயுற்றவர்களுக்கு சொல்வது ஆலோசனைகளே தவிர கட்டளைகள் அல்ல. அது அவரது மருந்துகள் சம்பந்தமாக இருந்தாலும் சத்திர சிகிச்சைகள் சம்பந்தமாக இருந்தாலும் மருத்துவக் குழுவின் ஆலோசனைகளைக் கேட்டு இறுதித்தீர்மானம் எடுக்கும் உரிமை நோயுற்றவர்களுக்கே இருக்கின்றது. அந்த ஆலோசனைகள் கடைப்பிடிக்கப்படாவிட்டால் கூட கோபித்துக்கொள்ளும் உரிமை மருத்துவக் குழுவுக்கு இல்லை. உதாரணமாக ஒருவர் கொடுக்கப்பட்ட மருந்துகளை ஒழுங்காக பாவிக்காது, உடற்பயிற்சியோ, உணவுக்கட்டுப்பாடோ எதுவும் செய்யாது உடல் பருத்து புகைக்கும் தன் பழக்கத்தையும் தொடர்ந்து கொண்டு குடிபோதையில் மருத்துவரைச் சந்திக்கப்போனால் கூட அவரைக் கோபித்துக்கொள்ளும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.

நோயுற்றவருடன் கலந்துரையாடாமல் அவரின் உண்மையான விருப்பு வெறுப்புக்கள் கேட்கப்படாமல் குடும்ப உறுப்பினர்களின் தீர்மானத்தின்பேரில் அவர் மீது பல சிகிச்சை முறைகளும் மற்றைய கவனிப்பு முறைகளும் திணிக்கப்படும் நிலை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டு விடுகிறது.

ஒருவன் நோய்வாய்ப்பட்டு விட்டான் என்பதற்காக அவனிற்கு இருக்கும் அடிப்படை மனித உரிமைகளை மீறிச் செயற்படுவது மனிதத்துவம் ஆகாது. அந்தவகையிலே நோயுற்றவர் தனது சொந்த விருப்பப்படி நடந்துகொள்ளும் உரிமையும் மதிக்கப்பட வேண்டும்.

தனது நோய் நிலை சம்பந்தமான முழு விபரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் உரிமை, அதற்கு செய்யக் கூடிய வைத்திய முறைகளால் ஏற்படக் கூடிய நன்மை தீமைகள் பற்றி அறிந்து கொள்ளும் உரிமை, ஒவ்வொரு சோதனைகளும் எதற்காகச் செய்யப்படுகின்றன என்று கேட்டு தெரிந்து கொள்ளும் உரிமை, உடற்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு நடத்தை மாற்றங்கள் போன்றவற்றால் ஏற்படக் கூடிய அனுகூலங்கள் பிரதி கூலங்கள் எவை என்பதை அறிந்து கொள்ளும் உரிமை போன்ற உரிமைகளை நோயுற்ற ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை சரியான முறையில் பயன்படுத்திக்கொண்டால் மட்டுமே அவரினால் தனது சிகிச்சை முறைகள் சம்பந்தமான தீர்மானத்தை சரியான முறையில் எடுக்க முடியும்.

நோயுற்ற ஒருவர் மருந்தை பாவிக்காமல் இருப்பதற்கு விருப்பப்படலாம், சத்திரசிகிச்சை செய்யாமல் இருக்க விரும்பலாம், தொடர்ந்து புகைப்பிடிப்பதற்கு விருப்பப்படலாம், உடலில் வலியை ஏற்படுத்தக்கூடிய சோதனைகளை செய்யாமல் விடுவோம் என்று நினைக்கலாம், தொடர்ந்து குடிவகைகள் பாவிக்க ஆசைப்படலாம், வேறோரு மருத்துவரின் இரண்டாவது அபிப்பிராயத்தை கேட்க விரும்பலாம், கோயிலுக்குச் சென்று சில சமயப் பெரியவர்களின் ஆசியும் அறிவுரையும் பெற்றுவர விருப்பப்படலாம், வேறு ஒரு மருத்துவ முறைக்கு மாறுவதற்கு விருப்பப்படலாம், சொந்த விருப்பத்தின் பெயரில் வைத்தியசாலையிலிருந்து வீடு செல்ல நினைக்கலாம், உணவுக்கட்டுப்பாட்டை தவிர்த்துக்கொள்ள விருப்பப்படலாம். இது போன்ற பல விருப்பங்கள் நோய்வாய்பட்ட ஒருவருக்கு இருக்க முடியும். மருத்துவத்துறையிலே ஒருவர் வாழும் காலத்தை நீடிக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோனதோ அதே அளவு முக்கியத்துவம் அவர் வாழும் காலத்திலே மகிழ்ச்சியாகவும் மனநிறைவாகவும் வாழவேண்டும், வாழ வைக்க வேண்டும் என்பதிலும் இருக்கின்றது. எனவே நோய்வாய்ப்பட்டவர்கள் தமது மன நிறைவுக்காக சுகாதாரம் சம்பந்தமான தமது சொந்த விருப்பங்களை மருத்துவக்குழுவிற்கு தயங்காமல் தெரியப்படுத்த முடியும்.

தமது உண்மையான நிலைப்பாட்டை அல்லது விருப்பங்களை மருத்துவக் குழுவிற்கு சொல்வதனால் அவர்களின் மருத்துவக் கவனிப்பில் பாதிப்பு ஏற்படும் என்று கருதிவிட முடியாது. மருத்துவக் குழு நோய்வாய்ப்பட்டவருக்கு சில விடயங்களை தெளிவுபடுத்த இது உதவியாக இருக்கும்.

சரியான ஆலோசனைகளை நோயுற்றவர் கடைப்பிடிக்காதுவிட்டால் அவருக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்து விடுமோ என்ற மனிதாபிமான அடிப்படையிலே நோயுற்றவர்களை கண்டிக்கும் நிகழ்வு பல நடைபெற்ற வண்ணம்தான் இருக்கின்றன. கண்ணுக்கு முன்னால் ஒருவர் ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்பொழுது அவரை தடுத்தும் கேட்காமல் அதே திசையில் அவர் சென்றுகொண்டிருக்கும் பொழுது அதனை அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பது யாருக்கும் மிகவும் கடினமானதாக இருக்கும். இந்த நிலையே பல சமயங்களில் மருத்துவனுக்கும் ஏற்படுகிறது. எது எவ்வாறாக இருப்பினும் நோயுற்றவருடன் கோபப்படுவது சரியான செயலாகாது.

மருத்துவ ஆலோசனைக்கு எதிராக ஒருவர் வீடு செல்லும் சந்தர்ப்பங்களில்கூட நோய்நிரூபண அட்டையையும் வீட்டிலே பாவிப்பதற்கான மருந்துகளையும் தொடர்ந்து வைத்தியசாலைக்கு வரவேண்டிய திகதிகளையும் கேட்டு பெற்றுக்கொள்ளும் உரிமை நோயுற்றவருக்கு இருக்கின்றது.

மனம் மாறி அல்லது நோய் கடுமையாகி மீண்டும் அவர் வைத்தியசாலைக்கு வந்து அனுமதிபெற விருப்பப்படின் எந்தவித மனச்சஞ்சலமும் இன்றி வைத்தியசாலைக்கு வந்து அனுமதிபெறும் உரிமை அவருக்கு இருக்கின்றது.

தொடர்ந்து மருந்தெடுக்க வேண்டிய தேவை உடையவர்கள் வைத்தியசாலை கிளினிக்கில் OPD ஊடாக தாமாகவே சென்று சேர்ந்துகொள்ளும் உரிமை இருக்கிறது. இதற்கு வேறு வைத்தியர்களின் சிபார்சு கடிதங்களோ அனுமதிக் கடிதங்களோ அவசியமில்லை.

நோயுற்றவர்களின் கவனிப்புமுறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. உயிருக்கும் உடலுக்கும் உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும் இடையேயான போராட்டமாகவே மருத்துச்சிகிச்சைமுறை அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு நோயுற்றவரும் குணப்பட்டுச் செல்லும் பொழுது அவரும் அவரது சுற்றமும் மட்டுமல்ல மருத்துவக் குழுவும் அவர்களுடன் சேர்ந்து மட்டற்ற மகிழ்ச்சி அடையும். ஒரு நோயாளிக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டால் அல்லது நோயுற்றவர் இறந்துவிட்டால் அவரது சுற்றத்துடன் சேர்ந்து மருத்துவக்குழுவின் உள்மனமும் துயரம்கொள்ளும்.

மருத்துவத்துறையில் மட்டுமல்ல எந்தத்துறையிலும் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சட்டக்கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வுகளும் கூட்டு முயற்சியுமே முக்கியமாக அமைகிறது.

**Dr.சி.சிவன்சுதன்,**
பொது வைத்திய நிபுணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டைக்காடு கேவில் மீனவர்கள் கவனயீர்ப்பு




(கரணவாய்)

கட்டைக்காடு கேவில் மீனவர் கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர். சமாசத்தினால் தொழில் தடைக் காலம் அறிவிக்கப்பட்ட நிலையில் தடைகளை மீறி தொழிலில் ஈடுபட்டவர்களது இறால் கூடுகள் கடற்றொழிலாளர் சமாசத்தினரால் அகற்றப்பட்டது. இதனையடுத்து சமாச உறுப்பினர்களது மீன்பிடி படகு மற்றும்வலைகள் இனம்தெரியாத நபர்களால் கடந்த வியாழக்கிழமை இரவு எரித்து நாசமாக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவ குடும்பங்கள் கட்டைக்காடு. கேவில் சந்தி பொது நோக்கு மண்டபம் முன்பாக குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர். (நி-5-6- 60)

## சேவை நலன் பாராட்டு



அதிபர். திரு.

**ச.வேலழகன்**

(யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

31.12.2023 இன்றுடன்
பணியில் இருந்து
ஓய்வுபெறும்
திரு.ச.வேலழகன்
அவர்கள் ஓய்வு காலத்தில்
மகிழ்வுடனும் சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றோம்

Best Wishes

கோட்டக் கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும்,
கோப்பாய்க் கல்விக்கோட்டம்.

(18314)

## ஏழாலை பகுதியில் அதிகரிக்கும் திருட்டுக்கள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மத்தி சிவகுரு வீதிப் பகுதியில் சில நாட்களாக தொடர்ச்சியான திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. மின் உபகரணங்கள், சமயலறை பொருட்கள் என்பன திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை நேற்று முன்தினம் வீடொன்றுக்குள் நுழைந்து திருட முற்பட்ட வேளை வீட்டு உரிமையாளர் கண்டதையடுத்து திருட வந்த நபர் தப்பித்துச் சென்றுள்ளார். இவ்வாறான திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி-5-6-26)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 750 | 500 | 700 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1700 | 1300 | 1500 | 2000 |
| தக்காளி | 600 | 650 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 150 |
| கோவா | 450 | 400 | 550 | 600 |
| கரட் | 520 | 600 | 850 | 1000 |
| பூசணி | 180 | 160 | 180 | 200 |
| புடோல் | 300 | 320 | 220 | 300 |
| வாழைக்காய் | 240 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 500 | 450 | 400 | 700 |
| பெரிய வெங்காயம் | 450 | 430 | 550 | 500 |
| பாகற்காய் | 800 | 700 | 700 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 280 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 500 | 500 | 450 | 500 |
| லீக்ஸ் | 350 | 380 | 550 | 600 |
| பீற்றூட் | -- | 600 | 700 | 800 |
| கறிமிளகாய் | 600 | 650 | 700 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 600 | 450 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 600 | 350 | 700 | 550 |
| கீரை - 1 பிடி | 180 | 160 | 200 | 250 |
| தேசிக்காய் | 800 | 450 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 900 | --. | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 200 | 100 | 130 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 160 | 100 | 200 |

# மணிவிழா வாழ்த்து

### மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.தம்பிராசா கிருபாகரன் அவர்களின் சேவைகளைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


திரு.தம்பிராசா கிருபாகரன் அவர்கள் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டுவரையாக 18 வருடங்கள் ஆசிரிய சேவையிலும் கல்வி நிர்வாக சேவையில் 16 வருடங்களுமாக 34 வருடங்கள் கல்வித் துறையில் சேவையாற்றியுள்ளார்.

1989 ஆம் ஆண்டு யா/ஒட்டகப்புலம் றோ.க.த.க பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று 18 வருடங்கள் ஆசிரியப் பணியினை செவ்வனேயாற்றி 2007 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நியமனம் பெற்று வடக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக 4 வருடங்களும் தொடர்ச்சியாக பிரதிக்கல்விப் பணிப்பாளராக 5 வருடங்களும் பின்னர் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் 3 வருடங்களும் தொடர்ச்சியாக 2023.12.30 ஆம் திகதி வரை 4 வருடங்கள் வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

"கேடில் விழுச்செல்வம் கல்வியொருவர்க்கு
மாடல்ல மற்றையவை"

அழிவில்லாத சீரிய செல்வமாகிய கல்வியைப் பெறுவதிலும் பெற்றதைப் பிறருக்கு அளிப்பதிலும் அதனைப் பெறும் வழியினைக் காட்டுவதிலும் கல்வி மான்களை உருவாக்குவதிலும் சிறந்த ஆளுமையுடைய ஆசிரியராகவும் கல்வி நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றிய இவரது சேவையினையும் ஆற்றலினையும் பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வு காலத்தில் நோய் நொடியின்றி நீண்ட காலம் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ இறைவனை வேண்டுவதுடன். மேலும் இவரது கல்விப் பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.ஜோன் குயின்ரஸ்,**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**வடமாகாண கல்வித் திணைக்களம்.**



**திரு.தம்பிராசா கிருபாகரன்**

(Trind,(maths), B.A, PGDE, MED) SLEAS-I

ஆசிரியர் சேவை
20.01.1989-11.03.2007
உதவிக்கல்விப்பணிப்பாளர்
12.03.2007-21.12.2011
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
22.12.2011-04.08.2019
வலயக்கல்விப் பணிப்பாளர்
05.08.2019-30.12.2023

34 வருடங்கள் கல்விப்பணியாற்றி மணி விழாக்காணும் தங்களை வாழ்த்துவதுடன் தங்கள் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

### கல்விச் செயலாளரின் ஆசிச் செய்தி

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.தம்பிராசா கிருபாகரன் அவர்களின் சேவையினை பாராட்டுவதுடன் சேவைநலன் பாராட்டு விழாவினை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இடைக்காடு. அச்சுவேலி எனும் இடத்திலே 1963 இல் பிறந்து தனது ஆரம்பக் கல்வியினை யா/இடைக்காடு மகா வித்தியால யத்திலும் இடைநிலைக் கல்வியினை கொழும்பு D.S சேனநாயக்க கல்லூரியிலும் உயர்தரத்தினை யா/இடைக்காடுமகா வித்தியால யத்திலும் சிறப்புறக் கற்று 20.01.1989 இல் பயிற்றப்பட்ட ஆசிரியராக கடமையாற்றி 1991-1992 வரையான காலப் பகுதி களில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கணித பாடத்துறையில் ஆசிரிய மாணவனான கற்று தேர்ந்திருந்தார். ஆசியர் பணியுடன் நின்றுவிடாது 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே வெளிவாரியாக பெரதேனியா பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்திருந்ததுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா. கல்விமானி. முது கல்விமாணி போன்ற பட்டங்களையும் பெற்று தனது கல்வி அறிவினை மேலும் விருத்தியடைச் செய்திருந்தார். தான் கற்ற கல்வியினை ஏனையவர்களும் பெற்றுக்கொள்ளும் பயனாக கிளிநொச்சி. திருகோணமலை போன்ற மாவட்டங்களிலும் தனது ஆசிரியப் பணியினை சிறப்புற ஆற்றியிருந்தார்.

ஆசிரியர் பணியின் தொடர்வாக தனது சிறந்த ஆளுமையின் பயனாக 12.03.2007 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தெரிவு செய்யப்பட்டு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக தனது கடமைகளினை பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து 2011-2016 வரையான காலப்பகுதிகளில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியிருந்ததுடன் 2016 இல் தென்மராட்சி வலயக் கல்வி அலு வலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார். 05.08.2019 முதல் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இன்று வரை சிறப்பான சேவையாற்றி 31.12.2023 முதல் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

தான் கடமையாற்றிய அலுவலகங்களிலே சிறந்த நிர்வாகியாகவும் சிறந்த தலைமைத்துவத்துடனும் தனது சிறப்பான சேவையினை வழங்கியுள்ளார். கல்வியறிவும். சுயமரியாதை எண்ணமும். பகுத்தறிவுத்தன்மையுமே மனிதனை உயர்த்தும் ஒரு வழி எனக் குறிப்பிடப்படுகின்றது. தனி மனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுமே கல்வி. இத்தகைய கல்வியினை தனது தலைமைத்துவத்தின் கீழ் சிறந்த முறையில் வழங்கி மாணவர்களின் வாழ்விற்கு ஒளியூட்டி சிறந்து விளங்க பெரும் பொறுப்புடன் பணியாற்றியுள்ளார்.

இவரது அளப்பரிய சேவையினை பாராட்டுவதுடன். தனது ஓய்வுக் காலத்தில் பல சமூக. சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**ம.பற்றிக் டிறஞ்சன்**
**செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**

(சி-8052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் மீது சர்வதேச நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்த தென் ஆபிரிக்கா

(பிரிட்டோரியா)

**இஸ்ரேல் மீது தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**




கடந்த மூன்று மாதங்களாக காசாவில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில், 20,000 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.

இதன் காரணமாகவே, தென் ஆபிரிக்கா இஸ்ரேல் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த முறைப்பாட்டில், "காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் இனப்படுகொலை தன்மை கொண்டவை, ஏனெனில் அவை பாலஸ்தீனிய தேசிய மற்றும் இனக்குழுவின் கணிசமான பகுதியை அழிக்கும் நோக்கம் கொண்டவை" என தென்னாபிரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், காசாவில் பாலஸ்தீனியர்களைக் கொல்வது, அவர்களுக்கு உடல் மற்றும் மனரீதியாக கடுமையாக தீங்கு விளைவிப்பது மற்றும் அவர்களின் உடல் ரீதியான அழிவைக் கொண்டு வருவதற்காக கணக்கிடப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை அவர்கள் மீது சுமத்துவது ஆகியவை கேள்விக்குரிய செயல்களில் அடங்கும்" எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஐ.நா.வின் உறுப்பினர்களான தென்னாபிரிக்கா, இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளும் நீதிமன்றத்திற்கு கட்டுப்பட்டவை ஆகும்.

அதேவேளை, பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் கொள்கைகள் நிறவெறிக்கு சமம் என பல மனித உரிமை அமைப்புகள் சாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# விண்ணில் ஏவப்படவுள்ள இந்திய செயற்கைக்கோள்



(டில்லி)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், தனது நாட்டின் முதல் எக்ஸ்-ரே போலரிமெட்ரி செயற்கைக்கோளை ஏவுவதற்கு ஆயத்தமாகியுள்ளது.

இதன்படி, குறித்த செயற்கைக்கோள் நாளை காலை 9:10 .மணிக்கு போலார் சாட்டி லைட் லாஞ்ச் வெஹிக்கிள் மூலம், விண்ணில் ஏவப்பட உள்ளது.

இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி பயணத்தில் இது ஒரு முக்கியமான தருணமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக்கோள் கருந்துளை எக்ஸ்ரே பைனரிஸ், வெப்பமற்ற சூப்பர் நோவா எச்சங்கள், நியூட்ரான் நட்சத்திரங்கள், செயலில் உள்ள விண்மீன் கருக்கள் மற்றும் பல்சர்ஸ் உள்ளிட்ட புறக்கோடி நிலைகளில் அறியப்பட்ட 50 பிரகாசமான வானியல் மூலங்களை ஆய்வு செய்வதற்கான இந்தியாவின் முதல் அர்ப்பணிக்கப்பட்ட போலரிமெட்ரி மிஷன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த செயற்கைக்கோள் 500 முதல் 700 கிலோ மீற்றர் வட்டமான பூமியின் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்படும் எனவும் இதன் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(நி-5-6)

# இஸ்ரேலுக்கு உளவு பார்த்த நால்வரை தூக்கிலிட்ட ஈரான்




(டெஹ்ரான்)

காசாவில் இஸ்ரேல் படையினர் தீவிர தாக்குதலை நடத்தி வரும் நிலையில், இஸ்ரேல் புலனாய்வு அமைப்பான மொசாட்டிற்கு உளவு பார்த்தனர் என்ற குற்றச்சாட்டில் நால்வருக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றியது ஈரான்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த தண்டனை நிறைவேற்றப்பட்டதாக ஈரான் அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாறு தூக்கிலிடப்பட்டவர்கள் மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நால்வருடன் சேர்த்து பல்வேறு குற்றச்சாட்டுகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கும் அந்த தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். ஏற்கனவே, இஸ்ரேலுக் காக உளவு பார்த்த குற்றச் சாட்டின் பேரில் ஈரானில் ஒருவருக்கு கடந்த 16 ஆம் திகதி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (நி-5-6)

# 30 ஆயிரம் கூகுள் பணியாளர்கள் அடுத்த ஆண்டு பணிநீக்கம்

(வோஷிங்டன்)

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் 30,000 பணியாளர்களை கூகுள் நிறுவனம் பணி நீக்கம் செய்யவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட செயறிவு தொழில்நுட்பங்கள் மூலம் அந்த பணியிடங்கள் நிரப்பப்படவிருப்பதாகவும் அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

கூகுள் நிறுவனத்தின் விளம்பர விநியோகப் பிரிவில் 30,000 பணியாளர்கள் நீக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கூகுளின் அமெரிக்கா மற்றும் உலக பங்காளர்களின் தலைவரான சான் டௌனி, விளம்பர விநியோகப் பிரிவில் புதிய மாற்றங்களைக் கொண்டுவரப் போவதாக முன்னர் தெரிவித்திருந்தார்.

அந்த 30,000 பணியாளர்களின் வேலையை கூகுளின் சில செய்யறிவு தொழில்நுட்ப்ங்கள் மூலம் எளிதாக செய்துமுடிக்க முடியும் எனக் கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 12,000 பணியாளர்களை கூகுள் நீக்கியிருந்தது.

அது தொடர்பில் பேசிய கூகுளின் நிறுவனர் சுந்தர் பிச்சை "அது கடினமான முடிவுதான், ஆனால் அது கட்டாயமாக எடுக்கபட வேண்டிய முடிவும் கூட" எனத் தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சோதனை செயற்கைக்கோளை விண்ணில் ஏவிய சீனா

(பீஜிங்)

விண்வெளி தொழில் நுட்பத்தில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு இணையாக சீனாவும் கடும் போட்டியிட்டு வருகிறது. அடிக்கடி செயற்கைக் கோள்களை ஏவி சோதனை நடத்தி வருகிறது.

அந்த வகையில் நேற்று செயற்கைக்கோள் இணைய தொழில் நுட்பம் தொடர்பாக சோதனை செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியுள்ளது. இது வெற்றிகரமாக நிர்ண யிக்க சுற்றுவட்டப் பாதையை அடைந்ததாக சீனா தெரிவித்துள்ளது. இந்த செயற்கைக் கோள் லாங் மார்ச்-2 சி கேரியர் ரொக்கெட் மூலம் நேற்றுக் காலை செலுத்தப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் இணைய தொழில்நுட்பம் சோதனை வெற்றி பெற்றால், செயற்கைக் கோள் மூலம் தகவல் தொடர்பு க்கான இணையதள வசதியை வழங்க முடியும். தற்போது எலா ன்மஸ்க் நிறுவனம் செயற்கை க்கோள் மூலம் இணைய தளம் வழங்கும் வசதியை கொண்டு ள்ளது.

கடந்த 27 ஆம் திகதி விண்வெளி தொழில்நுட்ப சோதனைகளை மேற்கொள்ள செயற் கைக் கோள்களை லாங் மார்ச்-11 மூலம் ஏவியது. தொழில் நுட்பகோளாறு காரணமாக ரொக்கெட் திசை மாறி விண்ணில் இருந்து பூமியை நோக்கி வந்தது. ரொக்கெட்டின் பூஸ்டர்கள் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் விழுந்து வெடித்து சிதறியமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயற்சி செய். உண்மையாய் இருக்க மட்டுமே உழைத்திடு.

– ஹோரஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மிதிலையில் கண்டது காட்சி இலங்கையில் காண்பது காட்சி

அது ஜனகமகாராஜாவின் ஆட்சி. ஒரு நாள் அந்நாட்டு மக்கள் நடையும் ஓட்டமுமாக மிதிலை நகருக்குச் செல்கிறார்கள்.

என்ன? சங்கதி. இத்துணை மக்கள் எதற்காக ஆர்வத்தோடும் ஆரவாரத்தோடும் செல்கிறார்கள். இந்த வினா எழுகிறது.

இதோ! அதற்கான பதில். ஜனகமகாராஜனின் புதல்வி சீதை. தன் மகளின் சுயவரத்தின் பொருட்டு வில் முறிக்கும் வீரச் செயல் நடக்கப் போகிறது.

அதனைக் காண்பதற்குத்தான் மக்கள் ஓடோடிச் செல்கிறார்கள்.

அட! அப்படியா சங்க்தி. வில் முறிக்கும் வீரச் செயலுக்கு இத்துணை மவுசா.

ஐயா! இது எங்கள் ஜனகமகாராஜாவின் மகளின் சுயம்வரம். சீதை எங்கள் வீட்டுப் பிள்ளை. எங்கள் மன்னவரின் மகள் எங்கள் பிள்ளை அன்றோ.

எங்கள் பிள்ளைக்குச் சுயம்வரம் என்றால், அதைக் காண்பதற்கு ஆசை இருக்காதா? என்ன. அதுதான் ஓடோடிச் செல்கிறோம் என்பது மக்களின் பதில்.

ஆம், ஜனகமகாராஜனின் வில்லை முறிப்பதற்காக அதோ இராமபிரான் வருகிறார்.

ஆகா! எங்கள் நாடு எத்துணை புண்ணியம் செய்த நாடு.

ஓ! இனி சீதை சீதாஇராமனாகிறாள். அந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர்.

இது இராமாயணம் கற்றபோது உள்ளத்தால் உவந்த காட்சி.

அந்தக் காட்சியை இரசித்த நமக்கு அனுபவத்தில் கிடைப்பது என்ன?

ஓ! இலங்காபுரி சிவபக்தன் இராவணேஸ்வரன் ஆண்ட மண். எனினும் இப்போது இது பௌத்த சிங்களவர்களுக்குரிய தேசம் என்று உரிமை கோரப்படுகின்றது.

இதை நாம் கூறும்போது பரவாயில்லை. அது இருக்கட்டும் நீங்கள் கண்ட காட்சி என்ன? அதைச் சொல்லுங்கள்.

உங்களின் ஆதங்கம் புரிகிறது. அதோ! இலங்கைத் திருநாட்டில் மக்கள் ஓட்டமும் நடையுமாக செல்கின்றனர். நகரமெங்கும் மக்கள் கூட்டம். ஒவ்வொருவர் முகத்திலும் பதற்றம் இனம்புரியாத ஏக்கம்.

என்ன சங்கதி சுயம்வரத்துக்கு வில்லுடைக்கும் வீரமெல்லாம் யுகம் கடந்த கதை.

அப்படியானால், எதற்காக மக்கள் இப்படியாக ஓடுகிறார்கள்.

ஓர் அன்பரை இடைமறித்தேன். ஐயா! ஏன் இத்துணை வேகம். அவரிடம் பதிலேதும் இல்லை. மற்றவரைக் கேட்டேன்.

தம்பி நாளை 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தெரியாதா? தெரியும் ஐயா! அதற்காக இத்துணை ஏக்கமும் பதற்றமும் ஏன்.

அட! அடுத்த ஆண்டில் எங்கள் மன்னர் கடும் வரி விதித்துள்ளார். பொருட்கள் எல்லாம் யானை விலை குதிரை விலை என எகிறப் போகிறது.

2024ஆம் ஆண்டில் எங்கள் வாழ்க்கை, எங்கள் சீவியம், எங்கள் உழைப்பு எப்படியாகுமோ தெரியாது.

இந்த ஆண்டின் கடைசிநாள் இது. இப்போது ஏதேனும் வாங்கி வைத்தால் நல்லதல்லவா அதுதான் ஓடுகிறோம் என்றார்.

ஓ! இதுதான் மிதிலையில் கண்ட காட்சியும் இலங்கையில் காண்கின்ற காட்சியும்.

# வல்லரசுகளின் தலைவர்களைவிட ஜனாதிபதி ரணில் சிறந்தவர்

## வஜிர அபேவர்தன புகழாரம்

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வல்லரசு நாடுகளின் தலைவர்களை விடவும் சிறந்த தலைவர் என ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதியால் மட்டுமே இலங்கைக்குப் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில், அனைவரும் ஒன்றிணைவோம் என ஜனாதிபதி தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகின்றார்.

நாம் பிளவுபட்டு நின்றால் வெளிநாட்டு சக்திகள் நாட்டுக்குள் நுழையும். எனவே அதற்கு இடமளிக்காது அரசியல் கட்சிகள் மற்றும் இடதுசாரிகள் தேசிய ஒற்றுமைக்காக ஒன்றிணைய வேண்டும்.

அப்போது ஜனாதிபதியால் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும். நாம் பிரிந்து நின்றால் நாடு விழும். நாட்டை நிர்வகிக்கக்கூடிய சிறந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதால் தான் நாம் அவர் பின்னால் நிற்கின்றோம்.

அமெரிக்க ஜனாதிபதி பைடன், ரஷ்யா ஜனாதிபதி புடின் ஆகியோரை விடவும் ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர் என நான் குறிப்பிட்டிருந்தேன்.

ஆம். புடின் 1999 இல் தான் அரசியலுக்கு வந்தார். நாடுகள் பெரிதாக இருக்கலாம், சொத்துக்கள் இருக்கலாம். பொருளாதார ரீதியில் முன்னேறி இருக்கலாம். ஆனால், எமது நாட்டுத் தலைவருடன் ஒப்பிட முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் செல்லும்போது, அவர் ஜனாதிபதி ஆவார் என கூறினோம். மறுநாள் எனக்குப் பைத்தியம் என்றார்கள். நடந்தது என்ன? ஏனெனில் ரணிலின் நகர்வுகள் எமக்குத் தெரியும் என தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயார்

### தம்மிக்க பெரேரா

அடுத்த வருடத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆரம்பகட்ட தயார்படுத்தல்களை முன்னெடுத்து வருவதாக பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட தயாராக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஹயஸ் - ஆட்டோ விபத்து 4 வயது சிறுவன் மரணம்

ஹயஸ் வாகனமும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம் மீரிகமை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முச்சக்கர வண்டியில் பயணித்த நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வயது சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவருடன் பயணித்த 38 வயதுடைய தந்தையும், 47 வயதுடைய முச்சக்கர வண்டி சாரதியும் படுகாயங்களுடன் மீரிகமை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், 27 வயதுடைய ஹயஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## வரி திருத்தத்தினால் நீர்க் கட்டணம் உயர்வு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தகவலின்படி,

ஜனவரி மாதம் மேற்கொள்ளப்படும் VAT திருத்தத்தின் காரணமாக நீர்க் கட்டணமும் அதிகரிக்கப்படும்.

அதன் வர்த்தக பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் பியால் பத்மநாத இதனைத் தெரிவித்தார்.

இதன் காரணமாக நீர்க் கட்டணம் 3 வீதத்தால் அதிகரிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## முரண்பாடு காரணமாக தம்பியை கொடூரமாக கொன்ற அண்ணன்

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் இளைய சகோதரனை கொடூரமாக கொலை செய்த அண்ணனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்னெவ பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் மண்வெட்டியால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவுக்கண பிரதேசத்தை சேர்ந்த லலித் சந்திரகுமார என்ற முன்னாள் கடற்படை வீரரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை முகாமில் கடமையாற்றும் காலத்தில் இடம்பெற்ற விபத்தொன்றினால் ஊனமுற்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இந்நிலையில், இரு சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், மூத்த சகோதரன் இளைய சகோதரனின் தலையில் மண்வெட்டியால் தாக்கியுள்ளார்.

இதில் காயமடைந்து தரையில் வீழ்ந்தவரை மூத்த சகோதரன் மீண்டும் பலமாக தாக்கி கொலை செய்துள்ளார்.

சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட வேளையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## ஐந்து மாவட்டங்களில் மண்சரிவு எச்சரிக்கை

5 மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 2:30 முதல் இன்று பிற்பகல் 2.30 மணி வரை குறித்த மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தின் சொரணதொட்டை மற்றும் பசறை பிரதேசங்கள், கண்டி மாவட்டத்தில் உடுதும்பர பிரதேசம், மொணராகலை மாவட்டத்தில் மெதகம பிரதேசம், நுவரெலியா மாவட்டத்தில் ஹகுரன்கெத்த மற்றும் வலப்பனை பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து அந்த பகுதிகளில் வசிக்கும் மக்களை விழிப்புடன் இருக்குமாறும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, பதுளை மாவட்டத்தின் பதுளை, ஹாலிஎல மற்றும் பண்டாரவளை பிரதேசங்களுக்கும் மாத்தளை மாவட்டத்தின் லக்கல, பல்லேகம, ரத்தோட்டை, நாவுல ஆகிய பகுதிகளுக்கும் முதல் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

### மூலம் சனிதோஷம் இனி இல்லை

ஞானகாரகனான கேது பகவான், தனகாரகனான குருவின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு டிச. 20.2023 முதல் 3 ஆம் இடத்தில் சனிபகவான் சஞ்சரிக்கப் போகிறார். இதனால் கடந்த காலத்தில் ஏற்பட்ட சனிதோஷம் இனி இருக்காது.

இதுவரையில் உங்கள் ராசிக்கு குடும்பம், வாக்கு ஸ்தானமான 2 ஆம் வீட்டில் ஏழரை சனியின் கடைசி பகுதியான பாத சனியாய் சஞ்சரித்த சனிபகவான் உங்களுக்கு பல வழிகளிலும் சங்கடத்தை வழங்கி வந்தார். நீங்கள் தொட்டதெல்லாம் தோல்வியாக இருந்தது. விரயத்திற்கு மேல் விரயமானது. இழப்புகளும் அதிகமானது.

இந்நிலையில் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்க உள்ள சனியால் தொழில் சிறப்படையும். ஆரோக்கியம் சீராகும். வேலை தேடியவர்களுக்கு வேலை அமையும். பதவி உயர்வும் எதிர்பார்த்த இடமாற்றமும் ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷமும் செழிப்பும் உண்டாகும். எதிரிகளை அடக்கி வெற்றி கொள்ளும் ஆற்றல் உண்டாகும். சமூகத்தில் மதிப்பு அதிகரிக்கும். சுபநிகழ்ச்சிக் கூடுதல் பணம் செலவாகும். சிலருக்கு பூர்வீக சொத்தில் இருந்த வில்லங்கம் விலகும்.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜூன் 19.2024 வரையிலும் நவ 4.2024 - பெப் 27.2025 வரையிலும் தொட்டது துலங்கும். லாபம் கிடைக்கும். நினைத்ததெல்லாம் நிறைவேறும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். இடம், பூமி, வாகனம் வாங்கும் எண்ணம் பூர்த்தியாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி வந்து சேரும். கலைஞர்களுக்கு இக்காலம் யோகமான. காமாக இருக்கும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் வெளிநாட்டு தொடர்புகள் ஆதாயம் தரும். உத்தியோகத்தில், தொழிலில் முழு கவனத்தையும் செலுத்த வேண்டியதாக இருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். தாய்வழி உறவினர்களுடன் சில சங்கடங்கள் ஏற்படும். ஏப்.26.2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக் கும் நிலையில் முயற்சிகள் யாவும் வெற்றியாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். போட்டியாளர்கள் விலகிச் செல்வர். உடல்நிலையில்முன்னேற்றம் உண்டாகும். அரசு விவகாரங்களில் ஆதாயம் அதிகரிக்கும். மற்றவர்களை வழிநடத்தக் கூடியவர்களாக இருப்பீர்கள்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் செல்வாக்கு உயரும். விருப்பம் பூர்த்தியாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். பணவரவு அதிகரிக்கும். குலதெய்வ அருளால் உங்கள் நிலை உயரும். சொத்து சேர்க்கை உண்டாகும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பொறுப்பு வந்து சேரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். மே 1.2024 - மே 13.2025 காலத்தில் 6 ஆம் இடத்து குருவால் அலைச்சல் அதிகரிக்கும். உடல்நிலையில் சங்கடங்கள் ஏற்படும். வீண் பிரச்சினைகள் தேடி வரும். எதிரிகளால் சில சங்கடங்களை சந்திக்க நேரும். மே 14.2025 முதல் 7இல் சஞ்சரிக்கும் குருவால் பிரச்சினைகள் விலகும். அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த நன்மைகள் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு விருப்பம் நிறைவேறும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். பொருளாதாரம் உயரும். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடந்தேறும்.

**பொதுப்பலன்**

முன்பிருந்த நெருக்கடி, சங்கடம் முழுமையாக விலக ஆரம்பிக்கும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும். நினைத்ததை சாதிக்கும் நிலை உண்டாகும். எதிர்பார்ப்பு நிறைவேறத் தொடங்கும். இழப்புகளிலிருந்து கற்ற பாடங்களின் வழியாக திடசிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் தோன்றும். துணிச்சலும் தைரியமும் அதிகரிக்கும்.

**தொழில்**

நஷ்டத்தில் இயங்கிய தொழில் இனி லாபத்தில் செல்லும். உங்களுடைய முயற்சியும் அதிகரிக்கும். சிலர் புதிய தொழில் தொடங்குவர். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வெளிநாட்டு தொடர்புகள் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் லாபத்தை உண்டாக்கும்.

**கல்வி**

படிப்பிலிருந்த தேக்கநிலை மாறும். மனதில் தெளிவான சிந்தனை உண்டாகும். அதனால் ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்று செயற்பட்டு பொதுத்தேர்வில் சாதனை புரிவீர்கள். எதிர்பார்த்த மதிப்பெண்கள் கிடைக்கும்.

பரிகாரம் தட்சணாமூர்த்தியை ஒருமுறை தரிசித்து வாருங்கள். குறை யாவும் தீரும்.

### பூராடம் சிறப்பான காலகட்டம்

களத்திரக்காரகனான சுக்கிரன், தனகாரகனான குருவின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு டிச. 20.2023 முதல் தைரிய வீரிய ஸ்தானத்தில் ஆட்சியாக சஞ்சரிக்கப் போகிறார் சனி பகவான்.

உங்கள் வாழ்க்கையில் சில ஆண்டுகளாகவே ஏராளமான சங்கடம், சிக்கல், போராட்டங்கள் இருந்திருக்கும். இந்நிலையில் 3 ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் சனிபகவான் உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனையை உண்டாக்கப் போகிறார். இக்காலம் உங்களுக்கு சிறப்பான காலகட்டமாக இருக்கும்.

இத்தனை நாளும் ஏழரை சனியின் பிடியில் இருந்த நீங்கள் இப்போது விடுபட்டு நிம்மதி காண்பீர்கள். முயற்சி அனைத்தும் வெற்றி அடையும். பொருளாதார நிலையில் மேம்பாடு உண்டாகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களின் செல்வாக்கு உயரும். பதவி உயர்வும் விரும்பிய இடத்திற்கு மாற்றமும் ஏற்படும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் அதிகரிக்கும்.

**அதிர்ஷ்ட காலம்**

அவிட்டம் நட்சத்திரத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலமான டிச.20.2023 -பெப் 15.2024 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29.2025 - ஜூலை 2.2025 வரையிலும் நவ. 17. 2025 - மார்ச் 6.2026 வரையிலும் தாராபலன்களினால் அதிகபட்ச நன்மைகளை அடைவீர்கள். உங்கள் வாழ்வில் இது முன்னேற்றமான காலமாக இருக்கும். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும். ஆதாயநிலை ஏற்படும். பணியில் இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு நினைத்ததை அடைவீர்கள். வெளிநாட்டு தொடர்புகளால் புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த செல்வாக்கு, அந்தஸ்து உயரும். பணவரவு அதிகரிக்கும். அதன் காரணமாக புதிய வீடு கட்டி குடியேறுவது, வாகனம் வாங்குவது, பிறருக்கு உதவுவது என இக்காலம் மற்றவர்கள் பாராட்டும்படி இருக்கும்.

**ராகு- கேது சஞ்சாரம்**


ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். வெளிநாட்டு தொடர்புகளால் ஆதாயம் உண்டாகும். பணியில் வேலைப்பளு அதிகரிக்கும். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும். ஏப்.26. 2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் செல்வாக்கு உயரும். சிலர் கோயில் கும்பாபிஷேகத்திற்கு நிதியுதவி செய்வீர்கள். பெரியோரின் ஆசிர்வாதம் உண்டாகும். முயற்சி யாவும் வெற்றியாகும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரத்தில் இருந்த தடை விலகும். தொழில் லாபத்தை நோக்கிச் செல்லும். திட்டமிட்டு செயற்பட்டு எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை 5 இல் சஞ்சரிக்கும் குருவால் குலதெய்வ அருள் உண்டாகும். குடும்ப பிரச்சினைகள் விலகும். தடைபட்ட சுபநிகழ்ச்சி நடைபெறும். பணவரவு அதிகரிக்கும். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற நிலை மாறி தேவை அனைத்தும் பூர்த்தியாகும். மே 1.2024 - மே 13.2025 காலத்தில் 6 இல் சஞ்சரிக்கும் குருவால் எதிர்பாராத தடைகளை சந்திப்பீர்கள். உடல் நிலையிலும் சங்கடம் ஏற்படும். எதிர்ப்பு வலுக்கும். எங்கு சென்றாலும் போட்டி, பிரச்சினை என்ற நிலை ஏற்படும். மறைமுக எதிரிகளால் சங்கடங்களை சந்திக்க நேரும். மே 14.2025 முதல் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால், மீண்டும் வாழ்வில் பிரகாசம் உண்டாகும். வெளி வட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். மற்றவர்களால் மதிக்கும் நிலை ஏற்படும். பணிபுரியும் இடத்தில் மரியாதை அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். குடும்பத்தில் தடைபட்ட சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும்.

**பொதுப்பலன்**

போராட்டம், பிரச்சினைகள் என்ற நிலை மாறும். செயல்கள் இனி வெற்றியாகும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழிலில், வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகும்.




**20.12.2023-06.03.2026**

உழைக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். கடந்தகால பிரச்சினைகளை சிந்தித்து திட்டமிட்டு செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் அதிகரிக்கும். உழைப்பும் முயற்சியும் வெற்றியை உண்டாக்கும்.

**தொழில்**

3இல் சஞ்சரிக்கும் சனியால் தொழிலில் தடைகள் விலகும். எதிர்பார்த்த வளர்ச்சியை இக்காலத்தில் பெறலாம். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். உங்கள் தனித்திறனால் புதிய ஒப்பந்தம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். இயந்திரத்தொழில், விவசாயம், கால்நடை, வாகன உற்பத்தி, வாகன விற்பனை, கலைத்துறை, அச்சுத்தொழில் லாபமடையும்.

**கல்வி**

படிப்பில் ஆர்வம் உண்டாகும். பொதுத் தேர்வு, போட்டித்தேர்வு போன்றவற்றில் ஆசிரியர்களின் ஆலோசனையின்படி செயற்பட்டு கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள். சிலருக்கு மேல் கல்விக்காக வெளிநாட்டிற்கு செல்லும் வாய்ப்புண்டாகும்.

பரிகாரம் ராகு காலத்தில் துர்கை வழிபாடு, சனிக்கிழமைகளில் அனுமனை வழிபடுவது நன்மை தரும்.

### உத்திராடம் 1 ஆம் பாதம்
### நினைத்த செயலில் வெற்றி

ஆத்மகாரகன் என்று கூறப்படும் சூரிய பகவான் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்தாலும் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர் களுக்கு, தனகாரகனான குருபகவான் பிறந்நாதனாகவும் 2.3.4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஆயுள்காரகனான சனிபகவான் ராசிநாதனாகவும் உள்ளனர். கோச்சார ரீதியாக சனி சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ப பலன்களை அவரவர் கர்ம வினைக்கேற்ப வழங்கக் கூடியவராகிறார்.

உத்திராடம் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு சனி 3 ஆம் இடத்திலும் 2.3.4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு 2 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார். இதனால் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு, அதிர்ஷ்டங்களை அள்ளி வழங்கு வார். தொழிலில் முன்னேற்றம். சங்கடங் களில் இருந்து விடுதலை. நினைத்த செயலில் வெற்றி, சமுதாயத்தில் அந்தஸ்து பெறும் நிலை உண்டாகும். இழந்தவற்றை மீட்டெடுக்கும் ஆற்றலை வழங்குவர்.

**அதிர்ஷ்ட காலம்**

சனி பகவான் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜூன் 19.2024 வரையிலும் நவ 4.2024 - பெப் 27.2025 வரையிலும் 4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கும் அதிர்ஷ்ட பலன்கள் உண்டாகும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப்.26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 4 ஆம் இட ராகுவும் 10 ஆம் இட கேதுவும் அலைச்சலை அதிகரிப்பர். உடல் நிலையில் சங்கடத்தை ஏற்படுத்துவர். தொழிலில் தடைகளையும் எதிர்பார்த்த வருமானத்தில் இழுபறியையும் உண்டாக்குவர். முயற்சிகளில் ஏமாற்றத்தை ஏற்படுத்துவர். ஏப்.26.2025 இற்கு பிறகு 1 ஆம் பாதத்தினருக்கு 3 ஆம் இட ராகுவும் பாக்ய ஸ்தான கேதுவும் நன்மைகளை அதிகரிப்பர். துணிச்சலாக செயற்பட்டு நினைத்ததை சாதிக்கும் நிலையை உண்டாக்குவர். அந்தஸ்தும் செல்வாக்கும் உயரும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும்.

**குரு சஞ்சாரம்**

உத்திராடம் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏப்.30.2024 வரை 5 ஆம் ஸ்தானத்திலும் மே 1.2024 - மே 13. 2025 வரை 6 ஆம் ஸ்தானத்திலும் மே 14.2025 முதல் 7 ஆம் ஸ்தானத்திலும் சஞ்சரிக்க இருக்கிறார் குருபகவான். 5.6 ஆம் ஸ்தானங்களில் சஞ்சரிக்கும் போது வாழ்வில் முன்னேற்றம், பொன் பொருள் சேர்க்கை, குடும்பத்தில் சுபநிகழ்ச்சி, புதிய தொழில் தொடங்கும் முயற்சி, பதவி உயர்வு, விரும்பிய இட மாற்றம் என்ற நிலையையும் சமுதாயத்தில் அந்தஸ்தையும் வழங்குவார்.

**பொதுப்பலன்**

சனி பகவானின் சஞ்சார நிலை சாதகமாக இல்லையென்றாலும் இக்காலத்தில் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலை வாழ்க்கையை வளமாக்கும். எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும். வருமானத்தை அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி, ஒற்றுமையை ஏற்படுத்தும். தொழிலில் ஏற்படும் தடைகளை விலகி வைக்கும். பணியில் இருந்த பிரச்சினைகளை நீக்கி வைக்கும். வேலை தேடியவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும். திருமண வயதினருக்கு திருமணம் நடக்கும். பொன், பொருள், பூமி, வாகனச் சேர்க்கையை உண்டாக்கும்.

**தொழில்**

தொழிலில் அக்கறை அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும். விவசாயம், இயந்திரத் தொழில், பத்திரிகை, பதிப்பகம், கம்ப்யூட்டர் தொழில்கள், எஸ்டேஷனரி, ஆட்டோ மொபைல்ஸ், பேக்ரி, எலக்ட்ரானிக்ஸ், எக்ஸ்போர்ட், ரியல் எஸ்டேட் போன்றவை வளர்ச்சியடையும். உங்கள் முயற்சியின் காரணமாக லாபம் அதிகரிக்கும்.

**கல்வி**

படிப்பில் கவனம் அதிகரிக்கும். அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். அதற்காக ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள். மேற்கல்வியில் விரும்பிய பாடப்பிரிவில் இடம் கிடைக்கும்.

**குடும்பம்**

சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும், செல்வாக்கு அதிகரிக்கும். குடும்பத்தில் திருமணம், குழந்தை பாக்கியம், புதிய வீட்டிற்கு குடிபோகுதல் போன்ற சுபநிகழ்ச்சி நடைபெறும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். வெளிநாட்டு முயற்சிஆதாயம்தரும். தம்பதியிடையே ஒற்றுமை அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்காலத்திற்காக திட்டமிட்டு செயற்படுவீர்கள். வம்பு வழக்கில் இருந்து விடுபடுவீர்கள். சேமிப்பு அதிகரிக்கும்.

பரிகாரம்நடராஜரை வழிபட்டு வர வாழ்க்கை வளமாகும். நிம்மதி கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் மேலும்...

மணிநேரத்தில் 1554 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் பிடியாணை உத்தரவுக்கிணங்க 82 பேரிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சட்ட விரோத சொத்து விவகாரம் தொடர்பில் 2 பேர் விசாரிக்கப்படவுள்ளனர்.

மேலும், இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 590 கிராம் ஹெரோயின், ஒரு கிலோ 300 கிராம் ஐஸ், 6 கிலோ 330 கிராம் கஞ்சா உள்ளிட்ட வேறு சில போதைப்பொருள் வகைகளும் போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கைதானவர்களில் போதைக்கு அடிமையான 62 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## புங்குடுதீவில்...

கிருசா (வயது - 19) என்ற மாணவியே நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விபரீத முடிவெடுத்து குறித்த மாணவி உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)

## 33 வயதுடைய...

என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## வைத்தியசாலைத்...

சிகிச்சை ஒன்று வெற்றிகரமாக செய்யப்பட்டு, அதன் பின்னர் ஒட்சிசன் வழங்கப்படுவதற்கு பதிலாக அதிகளவு காபனீரொட்சைட் வாயு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதா? அல்லது ஒட்சிசன் சிலிண்டர் மாசடைந்துள்ளதா? என்பதை கண்டறிவதற்கான விசாரணைகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## சி.ஐ.டி எனத்...

வந்த இளைஞர் ஒருவரை மறித்து தாம் சி.ஐ.டி. எனக் கூறி, தம்மைத் தாண்டிக்குளம் குளக்கட்டுப் பகுதியில் இறக்கிவிடுமாறு கூறியுள்ளனர்.

இதனை நம்பிய அந்த இளைஞர் அவர்களை ஏற்றிக்கொண்டு தாண்டிக்குளம் குளக்கட்டுப் பகுதியால் சென்றபோது மேற்படி இளைஞரிடம் இருந்த கைத்தொலைபேசியைப் பறித்துக்கொண்டு மூன்று இளைஞர்களும் தப்பிச் சென்றனர்.

அதேவேளை அந்த மூவரும் மடுகந்த பகுதிக்குச் சென்று அங்கு வீதியால் சென்ற பெண் ஒருவரின் சங்கிலியையும் அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து பொலிஸார் விரைந்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்போது குறித்த மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து திருடப்பட்ட சங்கிலி மற்றும் கைத்தொலைபேசி என்பனவும் மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது வவுனியாவில் திருடப்பட்ட 2 மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டதுடன், கிளிநொச்சியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும் லப்டொப் ஒன்றும் கைத்தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 28 வயதுடைய இரண்டு இளைஞர்களும், கிளிநொச்சியைச் சேர்ந்த 29 வயது இளைஞர் ஒருவருமே கைது செய்யப்பட்டனர். (ம-7)

# அம்மை நோய்த் தடுப்பூசி வேலைத்திட்டம் ஆரம்பம்

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு அம்மை நோயிற்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஜனவரி 6 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தனது உத்தியோகபூர்வ முகநூலில் பதிவிட்டுள்ள சுகாதார மேம்பாட்டு பணியகம், குழந்தைகள் மத்தியில் அம்மை நோய் அதிகளவில் பரவி வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 2 இலட்சம்...

எண்ணிக்கை சுமார் 200,000 என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த 4 மாதங்களுடன் ஒப்பிடுகையில் மாதம் ஒன்றில் பதிவான அதிக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இதுவாகும்.

அத்துடன், இந்த ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.5 மில்லியனாக பதிவாகலாம் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம-7)

## இணைய...

சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இணையத்தில் இத்தகைய மோசடிகளுக்குள் பெண்களே அதிகம் சிக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஒரு...

பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஒவ்வொருபதிவு செய்யப்பட்ட நபரும் வரி செலுத்த வேண்டும் என்ற எண்ணமில்லை. எந்த வொரு நபரும் தனது மாத வருமானம் 100,000 ரூபாயை தாண்டவில்லை என்றால், அவர்கள் வரி செலுத்துவதற்கு உரிமை இல்லை. வரியின் அடிப்படையில் நாங்கள் முடிவு செய்கிறோம்.

எவ்வாறாயினும் வரிக் கோப்பைத் திறந்து பதிவு செய்வது ஒரு நபருக்கு மிகவும் மதிப்புமிக்கது ஜனவரி மாதத்தின் பின்னர், புதிய வாகனங்களை கொள்வனவு செய்யும் போதும், புதிய வருமான அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதிலும், நடப்புக் கணக்கு ஆரம்பிக்கும் போதும், சொத்துக்களை கொள்வனவு செய்யும் போதும் வரிக் கோப்பு இலக்கம் கட்டாயமாக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இலங்கை...

இந்த வருடத்தில் இதுவரை பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 87,570 ஆகும்.

அதில் கொழும்பு மாவட்டத்தில் 18,517 பேர் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, நாடு முழுவதும் டெங்கு அதிக ஆபத்துள்ள 62 வலயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 55 மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)


MEGA MILLIONS மெகா மில்லியன்ஸ்
திகதி 2023.12.30 சீட்டிழுப்பு இலக்கம் 001
248386 1616 1432 02 20948

லக்கி 7 VIP
திகதி 2023.12.30 சீட்டிழுப்பு இலக்கம் 0170
X 4 4 1 5 3 8 X

தன நிதானய
திகதி - 2023.12.30 சீட்டிழுப்பு இலக்கம் - 1374
T 08 20 43 69 T
04248

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3586
சீட்டிழுப்பு திகதி 30.12.2023
S 01 07 39 68
S 31412

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.30
சீட்டிழுப்பு இலக்கம் 0653
மிதுனம் 08 13 48 51 மிதுனம்
57487 12

மஹஜன சம்பத
திகதி 2023/12/30
சீட்டிழுப்பு இலக்கம் 5344
Q 5 7 0 7 1 3

மெகா பவர்
திகதி 30/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1692
T 13 33 48 55 77
18795

உத்தியோகபூர்வ முடிவுகள்
30.12.2023 வெற்றி வாரம் 052 வர்ணம் நீலம்
L 2 7 5 7 4 2
5 1 1 4 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 25,176,507.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2318 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.30 தினம் சனிக்கிழமை
01 03 22 40 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,194,159.20
48092

சனிதா
திகதி 2023.12.30 வெற்றி வாரம் 4479
04 21 26 70 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,429,791.60
8 8 4 4 2

சீட்டிழுப்பு வாரம் 4030 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.30 தினம் சனிக்கிழமை
06 14 26 36 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,051,196.80
166550

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 16 37 52 56 59
1494 சிவப்பு 2023.12.30 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 485,707,056.20

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை வெற்றி வாரம்: 2144 சீட்டிழுப்பு திகதி: 2023.12.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,812,852.80
32 37 56 75 R
160882


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1992 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆயிலிய நட்சத்திரம் தனியார் நிறுவனத்தில் கணக்காய்வாளராக பணி புரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. பெற்றோர், உறவினர் மட்டுமே தொடர்புகொள்ளவும். (18409)

**077 669 2415**

## MUTHUKUMARU MATHS ACADAMY

**கணிதம், ஆங்கில மொழி மூலம் குழு வகுப்பு**

ஆரம்பம் : **03.01.2024 பி.ப 5 மணி**

**தரம் 6 புதிய வகுப்புக்கள்**
**7 - 11 (மீட்டல்)** (18454)

இல.19, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.
தொ.இல : **077 864 5971**

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
**0777 554 528** (18357)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்(யாழ் நகர்) வேம்படிச் சந்திக்கு அருகாமையில் 1 பரப்பு(ஒன்று) சற்சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு (18418)

**076 410 0840**

# சுமத்திராவில் நிலநடுக்கம்

சுமத்திரா தீவுகளில் 6.6 ரிச்டர் அளவில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து சுனாமி அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது இலங்கைக்கு சுனாமி அபாயம் நீங்கியுள்ளதாக இலங்கையின் சுனாமிஎச்சரிக்கை நிலையம் அறிவித்துள்ளது.

எனவே இலங்கையின் கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
**IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30%** *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(18230)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

**இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.

- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
  ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

(C-8054)

**077 165 1729, 077 773 0567, 021 222 8334**

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 283 /= | Max 3Kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 299 /= | Max 2Kg |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430 /= | |
| 1 Kg அரிசி மா | - 199 /= | |
| 1 Kg தீட்டல் பச்சை அரிசி | - 175 /= | |
| 1 Kg றவை | - 289 /= | |
| 1 Kg கோதுமை மா | - 185 /= | |
| 1 Kg Prima கோதுமை | - 195 /= | |
| 1 Kg சம்பா அரிசி | - 230 /= | Max 3Kg |
| 70g Baby Soap | - 116 /= | ~~145 /=~~ |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435 /= | ~~3900 /=~~ |
| 400g நெஸ்டமோல்ட் பெட்டி | - 750 /= | ~~830 /=~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 270 /= | ~~330 /=~~ |
| 01 Supiri றின் மீன் | - 480 /= | ~~850 /=~~ |
| 1 Kg Sunlight Rose பவுடர் | - 350 /= | ~~430 /=~~ |
| 01 Sunlight Soap | - 140 /= | ~~150 /=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50 /= | ~~80 /=~~ |
| 400g அன்லீன் Anlene | - 1250 /= | ~~1350 /=~~ |
| 180g Protinex | - 1699 /= | ~~1957 /=~~ |

1025/= Anchor ~~1080/=~~

(18453)


**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

# காணி விற்பனைக்கு

| Lot No. | Varagu Culture(VC) | | Acres | Roods | Perches | Sq.m |
|---|---|---|---|---|---|---|
| | Lms | Kulies | | | | |
| 1 | 02 | 0.00 | 0 | 0 | 20.33 | 514.2852 |
| 2 | 01 | 13.50 | 0 | 0 | 17.79 | 449.9996 |
| 3 | 02 | 3.91 | 0 | 0 | 22.54 | 570.1033 |
| 4 | 02 | 11.01 | 0 | 0 | 26.55 | 671.6090 |
| 5 | 02 | 10.61 | 0 | 0 | 26.33 | 665.8838 |
| 6 | 02 | 2.00 | 0 | 0 | 21.46 | 542.8566 |
| 7 | 02 | 2.00 | 0 | 0 | 21.46 | 542.8566 |
| 8 | 02 | 2.00 | 0 | 0 | 21.46 | 542.8566 |
| 9 | 01 | 10.91 | 0 | 0 | 16.33 | 413.0427 |
| Total | 19 | 1.94 | 1 | 0 | 34.25 | 4913.4934 |




ஊரெழு அம்மன் கோவிலில் இருந்து 200 m இல்
2, 2 1/2 பரப்புகளாக பிரிக்கப்பட்ட நிலையில்
காணி துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
காணி நன்னீரூற்றுக்கொண்ட குடியிருப்பு பிரதேசம்

(18367)

**077 077 3052,**
**076 430 8648, 074 375 5446**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org